www.tamilarangam.net

# தேசபக்தன்

தமிழீழ மக்களின் புரட்சிகர சனநாயக அரசியல் இதழ் - 12 மார்கழி 1996

★ போராளிகளே! களம் புகும் சகோதரர்களே!
அய்நாவின், அமைதிப்படைகளின் தலையீட்டை நிராகரியுங்கள்.

★ தமிழீழப் போராளிகளே! புலிகளே!
அரசியல் தீர்வுக்கு திம்புக்கோரிக்கைகளை முன்னிறுத்துங்கள்.

★ இந்திய இராணுவத்தை எதிர்த்து போர் புரிந்த புலிகளே!
இந்தியரசின் நேரடி-மறைமுக தலையீட்டை எதிருங்கள்.

★ புலிகளே! சிறீலங்கா அரசுக்கு எதிராக போராடும்
அமைப்புகள் மீதான தடையை பகிரங்கமாக நீக்குங்கள்.

★ சிறீலங்காவின் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே!
இனசமத்துவம் ஏற்பட திம்புக்கோரிக்கையை அங்கீகரியுங்கள்.

★ தமிழீழப் புரட்சிகர தேசபக்த சனநாய சக்திகளே!
எல்லாத் தளங்களிலும் இவற்றை முன்னிறுத்தி
ஒன்றுபடுவோம்.

PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMIL EELAM (PVOT)

www.tamilarangam.net

# தேசபக்தன்

தமிழீழ மக்களின் புரட்சிகர சனநாயக அரசியல் இதழ்-12 அன்பளிப்பு-ரூ.10, 10 டொலர்

வல்லரசியவாதிகளிடம் பிச்சை கேட்பதன் மூலம் அல்ல அனைத்து நாடுகளிலுள்ள மக்கள் போராட்டத்தின் மூலமாகவே உலக சமாதானம் வென்றெடுக்கப்பட முடியும். அடிப்படையில் பொதுமக்களை சார்ந்திருப்பதன் மூலமும், வல்லரசியங்களின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைக்கு எதிராக 'பழிக்கு பழி' 'அடிக்கு அடி' (TIT for TAT) கொள்கையில் போராட்டங்களை நடத்துவதன் மூலம்தான் சமாதானத்தை உறுதியுடன் பாதுகாக்க முடியும். இதுதான் சரியான கொள்கையாகும்.

(மா.ஓ)



உள்ளே | இலக்கம்

☆ தேசபக்தன் பார்வையில் 3
☆ வி.பு. தலைமைக்கு பகிரங்க மடல் 5
☆ உலக அழகிப் போட்டி 9
☆ வையகத்தை வெற்றி கொள்ள 13
☆ தமிழீழத்தில் மட்டுமா? சகோதரயுத்தம் 14
☆ மாணவர் போராட்டங்கள் 18
☆ போர்முனைக்கு வரும் போராளிகளே 21
☆ அனைத்து எதிரிகளிடமிருந்தும் 24
☆ ஓர் இன வெறியனின் மரணம் 25

தொடர்பு விலாசம்

**A. SHOBA DOSS**
**67, Parkwoodvilege dr**
**# 308 Donmills**
**Ontario**
**M3A 2x4**
**CANADA**

**அன்பான வாசகர்களுக்கு தேசபக்தனின் புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்!**

சிறீலங்கா அரசினதும் - தமிழீழ அராஜக இயக்கத் தலைமைகளதும் கெடுபிடிகளை மீறி, தேச எல்லைகளைத் தாண்டி, பொருளாதார, அச்சுப் பதிப்பு நெருக்கடிகளை சந்தித்த வண்ணம் "தேசபக்தன்" உங்கள் கைகளில் நிற்கிறான். தமிழீழ மக்களின் போராட்ட வீரனாக, உலகின் ஒடுக்கப்பட்ட தேசங்களின், மக்களின் தோழனாக "தேசபக்கதன்" வளர வேண்டும். தேசபக்தனை மற்ற தோழர்களின் கரங்களுக்கு மாற்றி உதவுங்கள். உங்கள் ஆலோசனைகளை, ஆதரவுகளை எங்களுக்கும் ஒரு வரி எழுதுங்கள்.


**தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் (த.தே.மு.க)**

www.tamilarangam.net



தேசபக்தன் பார்வையில்

# சரணாகதியா? போராட்டமா?




யாழ்ப்பாணத்தை மீண்டும் சொர்க்கமாக மாற்றுவது என அரசாங்கம் எந்தவித உறுதிகளைத் தந்தாலும் கடந்த அனுபவங்களின் காரணமாகத் திசையறியாத நிலையிலே கலங்கும் மக்கள்.

*1997 புதுவருட பிறப்புடன் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் இரண்டு சதாப்தங்களை தாண்டியுள்ளது, தேசிய விடுதலை யுத்தம் 13 ஆண்டுகளை கடந்து நிற்கிறது. தேசிய இன ஒடுக்குமுறையை தமிழ் மக்கள் தமது வாழ்வின் அனைத்து நிலைகளிலும் சகிக்க முடியாதளவுக்கு எதிர் கொண்ட நிலையில் தேசிய சுயநிர்ணய உரிமையின் பிரகாரம் இறுதி முடிவாக 'தனித்தமிழீழம்' என்ற முடிவுக்கு வந்தனர். 1977 தேர்தலில் தமது வாக்கு உரிமை மூலம் கூட அதை வெளிப்படுத்தினர். "வட்டுக் கோட்டை தீர்மானம்" வழியாக பாராளுமன்ற கதிரைகளை கைப்பற்றிய தரகு முதலாளி வர்க்க கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி! தேர்தலின் பின் சர்வகட்சி மாநாடு, மாவட்ட சபை அதிகாரத்துடன் தமிழீழ மக்களுக்கு துரோகம் செய்து சரணடைந்தது. 77-களுக்கு பின் தனித் தமிழீழம் அடைய ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த குட்டி முதலாளிய தலைமைகளில் பெரும் பாலனவை 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் தமிழீழ மக்களுக்கு துரோகம் செய்த மகாணசபை அதிகாரத்துடன் சரணாகதி அடைந்தனர். பாராளுமன்ற கதிரைகளிலும் உட்கார்ந்தனர். 87-க்கு பின்னரும் போராடிவரும் புலிகள் இயக்கம். இரண்டு ஆண்டுகளில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.*

*1977-ல் வீறு கொண்டெழுந்த தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் 1997-இல் பாரிய நெருக்கடிகளுடன் தேக்க நிலையில் நிற்கிறது. 'தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழீழ போராட்டம் சந்தித்துள்ள தேக்கத்தை உடைக்க போராளிகளிடம் என்ன வழி இருக்கிறது.*

*'சில்லா' பேரணியில் உரையாற்றிய சந்திரிகா அம்மையார் "புலிகளின் பிடியில் இருந்து தமிழர்களை மீட்க, அதிகார பரவல் திட்டத்தை நிறைவேற்ற ஒரு தொலைநோக்கு திட்டத்தை" புத்தாண்டில் நாட்டு மக்களுக்கு அளிக்கப் போவதாக கூறியுள்ளார். அதிகார பரவல் திட்டத்துக்கு பாராளுமன்றத்தில் ஆதரவு கிடைக்காவிட்டால், அரசியல் சட்டம் அதற்கு தடையாக இருந்தால் அதை தகர்க்க மக்களிடம் நேரடியாக ஆதரவு கோரும் 'புரட்சியை' செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.*

*இனப்பிரச்சனையை தீர்த்து நாட்டுக்கு சமாதானத்தையும், மக்களுக்கு அமைதியையும் கொடுக்க போவதாக கூறி ஆட்சியை பிடித்த சந்திரிகா தலைமையிலான 'மக்கள் கூட்டணி (?) அரசு. பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் (சமஷ்டி முறை) அடிப்படையில் அரசியல் தீர்வு என முதலில் கதைவிட்டது. பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மாகாணசபை முறை அடிப்படையையும் இனைக்கலாம் என நழுவியது.*

www.tamilarangam.net



இப்போது சுயாட்சி அமைப்பு முறை அதிகார பரவல் திட்டத்தில் வந்து நிற்கிறது. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போன்று சந்திரிகாவின் அரசியல் தீர்வு திட்டம் இருக்கிறது. இதை அமுல்படுத்த 'புரட்சி கூட' செய்ய தயாராக இருப்பதாக நடிக்கிறார்.

"புலிகளை அழிப்பது முதல் வேலை" என அரசுடன் கூடிச் செயற்பட்டு தமிழ் துரோக இயக்கங்களிடம் உள்ள ஆயுதங்களை, அந்த M.P.க்கள் பாதுகாப்புக்கு பயன்படுத்தும் ஆயுதங்களை கூட பிடுங்குவதற்கு சந்திரிகா அரசு தயாராகிவிட்டது. திருகோணமலையில் உள்ள EPDP, PLOT இயக்க அலுவலகங்கள் மீது பொலிசும், குண்டர்படையும் தாக்குதல் நடத்தியது, ஆயுதங்களை களையக் கோரி நடத்தப்பட்ட இனவாத ஊர்வலமும் அதை உறுதிப்படுத்தி வருகிறது.

சிறீலங்கா இராணுவம் 95'ல் யாழ் மீது நடத்திய சூரிய ஒளி 1-2,3ம் 96இல் பரந்தன் கிளிநொச்சி மீது நடத்திய "சத்தய ஜெய" ஆக்கிரமிப்பு யுத்தமும் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியை அரசின் கைகளுக்கு மாற்றிவிட்டது. இப்போது வடக்கின் மத்தியிலும், கிழக்கிலும் இராணுவ தாக்குதல் நடத்தப்படுகிறது. அரசு கைவசமான யாழிலும், கிளியிலும் "மக்களின் மத்தியிலுள்ள பயங்கரவாதிகளை முற்றாக அழிப்பது" எனக் கூறி சல்லடை போடும் தேடுதல் வேட்டைகள் தொடர்கிறது. கடந்த கால யுத்தங்களில் காணாமல் போன ஆயிரக்கணக்கானவர்களை கண்டுபிடிக்க 3 விசாரணைக்குழு அமைத்த சந்திரிகா அரசு, இன்று யாழில் மட்டும் 500 பேரை 'தானே காணாமல் போக செய்துவிட்டது. சோதனைகளில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டது. இராணுவம் கைதடியில் பள்ளி மாணவியை பலாத்காரம் செய்து அவரது குடும்பத்தையும் படு கொலை செய்துவிட்டது. நொச்சிமோட்டை சோதனைச் சாவடியில் காத்திருந்த அகதிகளில் 5000 பேரை வவுனியாவுக்குள் அனுமதித்துவிட்டு இப்போது வவுனியா விட்டு அகதிகள் வெளியேறுவதை தடுக்கிறது. 10000 பேர் வரை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் இலட்சம் அகதிகள் நிவாரணம் இன்றி வாடுகின்றனர். திருமலையில் 130 தமிழர்கள் சிறை போன்று தடுப்புக் காவலில் உள்ளனர். பிணை எடுக்க 35,000 முதல் 70,000 ரூபா வரை நீதிபதிகள் உத்தரவு, பணம் போனாலும் உயிர் பிழைத்தால் போதும் என பிணையில் வந்தவர்கள் ஊரை விட்டு ஓடுகிறார்கள். இத்தனை கொடுமைகளையும் எதற்காக இராணுவம் செய்கிறது? "அமைதிக்கான யுத்தம்" என்கிறது சந்திரிகா அரசு.

யாழையும், கிளிநொச்சியையும் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மூலம் கைப்பற்றிய குதுகலத்துடன் சிறீலங்கா இராணுவம் தனது 47-வது நினைவு தினத்தையும் கொண்டாடுகிறது. இன ஒடுக்குமுறை யுத்தத்தில் இராணுவம் 10,000 பேரை இழந்திருக்கிறது. 10,000 பேர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளனர். ஆனால் யுத்தத்தை தொடர 10,000 பேரை புதிதாக சேர்க்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஓடியவர்களை அழைக்கும் - தேடிக் கண்டுபிடிக்கும் திட்டமும் நடக்கிறது. கிழக்கில் வாழைச்சேனை, காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளில் இராணுவத்தை விட்டு ஓடிய முஸ்லிம்களது வீடு திடீர் திடீரென சுற்றி வளைக்கப்படுகிறது. ஏறாவூரில் முஸ்லிம் இளைஞர் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச இராஜ தந்திர சதி நடவடிக்கையிலும் வெற்றி பெற்று வருகிறது. அமெரிக்காவும், பிரான்சும் புலிகளை "சர்வதேச பயங்கரவாத பட்டியலில்" சேர்க்க முயற்சித்து வருகின்றன. கனடாவும், சுவிசும், பிரிட்டனும் புலிகளின் பண வசூல், வங்கி கணக்குகளை முடக்க தொடங்கியுள்ளன. தெற்காசிய கூட்டமைப்பில் "எல்லைப் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை பரஸ்பரம் கைவிடுவது" என்ற முறையில் புலிகளுக்கான ஆதரவை தடுத்து நிறுத்துவது இந்தியாவில் தடையை தொடரச் செய்வதில், வெளியுறவு அமைச்சரும் 'பெயரில் தமிழனும்' ஆன கதிர்காமர் கடும் பிரயத்தனம் செய்கிறார். இந்தியா சென்ற சந்திரிகா மத்தியரசுடன் பேசி முடித்த கையுடன் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 'வரதராஜப் பெருமாளை' (Raw உளவு அமைப்பு ஏற்பாட்டுடன்) சந்தித்து பேசி நாடு திரும்பியுள்ளார். சிறீலங்காவுக்கான வல்லரசு நாடுகளின் 97-ஆம் ஆண்டுக்கான 3100 கோடி உதவியை சந்திரிகா பிரான்சு சென்று இலகுவாக பெற்று வந்துள்ளார்.

"போர் என்றால் போர்", "சமாதானம் என்றால் சமாதானம்" 1977-இல் ஆட்சிக்கு வந்த J.R. இன் இனவெறிக்குரல் இது. 1997-இல் சந்திரிகாவின் குரல் "சமாதானமும் அமைதியும் ஒரே இலட்சியம்" "அமைதிக்காக போர் அவசியமாகவுள்ளது" யார்? எந்த அரசு? தமிழீழ மக்களை, அவர்களின் உரிமையை, போராட்டத்தை போராளிகளை பூண்டோடு அழித்தொழிப்பதில் 'குள்ள நரி' இனவெறித் தந்திரத்தில் தேர்ச்சி பெற்றவர்கள். இன்று வடக்கில் ஊராட்சி ஆட்சி தேர்தலை நடத்தி தலையில் இருந்து கால்வரை தமிழர்களை இனவாத அரசியல் அதிகார கட்டமைப்புக்குள் நசுக்கிவிட சந்திரிகா அரசு தயாராகிவிட்டது. சிங்கள பௌத்த இன வாதத்துக்கு அடிபணிந்து வாழும் அமைதியை ஏற்படுத்த ஒரு ஆக்கிரமிப்பு இன அழிப்பு யுத்தத்தை சிறீலங்கா அரசு நடத்தி வருகிறது. இதைத்தான் 'அமைதிக்கான போர்' என்கிறார் சந்திரிகா.

அரசு "புலிகள் ஆயுதங்களை கைவிட்டால் தான் பேச்சு வார்த்தை" என்கிறது. புலிகள் "யாழைவிட்டு இராணுவம் வெளியேறினால் தான் பேச்சு வார்த்தை" என்கின்றனர். மக்களை முட்டாள்களாக்குகிற எவ்வளவு பெரிய கேலிக்குரிய நிபந்தனைகளை இரண்டு பகுதியும் முன் வைக்கிறார்கள். வரலாற்றில் இப்படியான நிபந்தனை நடைமுறையாகி பேச்சு வார்த்தை நடந்ததுண்டா? அரசு, தான் புலிகள் மீது நடத்தும் ஒடுக்குமுறை யுத்தத்தை நியாயப்படுத்த, தொடர, புலிகளை அடிய பணியச் செய்ய அந்த நிபந்தனையை பயன்படுத்துகிறது என்றால், புலிகள் ஏன் இப்படிக் கோருகிறார்கள்? யுத்தத்தில் என்ன மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது? அரசு அரசியல் ரீதியிலும் - இராணுவ ரீதியிலும் முன்னிலை பெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது அது தானாக யுத்தத்தை நிறுத்த முன் வர மாட்டாது. அரசுதான் வைத்திருக்கும் அரசியல் மோசடி திட்டத்தை புலிகள் ஏற்கிறவரை தொடர்ந்து தாக்குவம். அரசியல் திட்டத்தை ஏற்றால் யுத்தத்தை நிறுத்தும் அல்லது அதுவரை அழித் தொழிப்பை தொடரும். புலிகள், யாழ் இராச்சியத்தை எதிரிகளிடம் இழந்ததையிட்டு வேதனைப்படுவது நியாயம். ஆனால் யுத்தத்தின் போக்கை புரிந்து கொள்ளாமல் "யாழை விட்டு இராணுவம் வெளியேறக் கோருவது" வெறும் கனவாகவே இருக்கும்.

www.tamilarangam.net



யுத்தம் பிரதான நிகழ்சியாக இருக்கும்போது போர் முனைகளின் வெற்றியும், தோல்வியும் கூட அரசியல் பேச்சு வார்த்தைகளில் பேரம் பேசும் சக்தியை கூட்டி குறைக்கும் என்பது உண்மைதான். பேச்சுவார்த்தைக்கான நிபந்தனையை விதிக்கும்போது புலிகள் குறைந்தது "தங்கள் கட்டுப்பாட்டு பகுதி மீதான எதிரியின் தாக்குதலை நிறுத்தக் கோரலாம், நீ தாக்காதவரை, நானும் தாக்கமாட்டேன் எனக்கூறி தங்களைச் சுதாகரித்து கொள்ளலாம். அதையும் மீறி இராணுவம் தாக்கினால் தற்காப்புக்காக நல்ல பதில் அடி கொடுக்கலாம். சமாதான முகமூடி போட்டபடி எதிரி நடத்தும் இன அழிப்பு யுத்தத்தை அதன் உள்ளடக்கத்தை முதலில் அம்பலப்படுத்தியாக வேண்டும். அரசின் அதிகாரபரவல் திட்ட அரசியல் தீர்வுக்கு பதிலாக தமிழீழ மக்களின் அரசியல் தீர்வு திட்டத்தை புலிகள் உட்பட போராளி இயக்கங்கள் உலக மக்களின் முன்னால் வைக்க வேண்டும். புலிகள் ஒரு தாக்குதலுக்கு செய்யும் தயாரிப்பை விட இது ஒன்றும் கடினமானதல்லவே. திம்புக் கோரிக்கைகளை நினைவு படுத்தி தீர்க்கலாம். சமாதானத்துக்கு அமைதிக்கு, அரசியல் தீர்வுக்கு தினமும் நாம் தயார் என்பதை நமது அரசியல் தீர்வு திட்டத்தை உள்நாட்டிலும் - உலக நாடுகளிலும் விளக்கமாக முன் வைக்க வேண்டும். அரசின் அரசியல் திட்டத்தை அம்பலப்படுத்தி நமது அரசியல் திட்டத்துக்கு உள்நாட்டு மக்களிடம், உலகத்திடம் ஆதரவை பெற வேண்டியுள்ளது. உள்நாட்டு மக்களிடம் நமது அரசியல் தீர்வு திட்டத்துக்கு உணர்வு பூர்வமான ஆதரவு இருந்ததால் சந்திரிகா மக்களிடம் ஆதரவு கோரும், அதிகார பரவல் திட்டத்தை புரட்சியை முறியடிக்க முடியும். எதிரியின் முன்னேறும், ஆக்கிரமிப்பு செய்யும் யுத்தத்தை, நமது தற்காப்பு யுத்தத்தால் முறியடிக்க வேண்டும். நமது கட்டுப்பாட்டு பகுதியில் எதிரி முன்னேறும் போது நாம் தொடர்ந்து பின்வாங்குகிறோம். என்றால் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள நமது தற்காப்பு, தாக்குதல் தயாரிப்பின் பலவீனங்களை, தவறுகளை உடனடியாக மாற்றியாக வேண்டும். தந்திரோபாய அடிப்படையில் மட்டும் போட்டிபோடும் பகுதிகளில் தாக்குதல்களை நடத்த வேண்டும். அரசின் கட்டுப்பாட்டு பகுதிகளில் தற்காலிகமாக தாக்குதல்களை நிறுத்த வேண்டும். அப்பகுதிகளில் அரசின் அரசியல் தீர்வு பற்றியும் இராணுவ அத்துமீறல்கள், மனிதவுரிமை மீறல்களை அம்பலப்படுத்த வேண்டும். அரசியல் வேலைகளை உக்கிரப்படுத்த வேண்டும்; புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் நுழையும் எதிரியை முடிந்தளவு தூரம் வரை விரட்டிச் செல்லும் தாக்குதல்களை புலிகள் நடத்த வேண்டும். இதை யாரும் குறை சொல்ல மாட்டார்கள், போராளிகளை யுத்த வெறியர்கள் என பிரச்சாரப்படுத்த முடியாத நிலைக்கு எதிரியை தள்ள முடியும். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் கண்டுள்ள தேக்கத்தை உடைக்க ஒரே வழி முதலாவதாக நமது அரசியல் தீர்வு திட்டத்தால், அரசின் அதிகார பரவல் திட்ட மோசடியை, மக்கள் மத்தியில் தோற்கடிக்க வேண்டும், அரசின் ஆக்கிரமிப்பு இன அழிப்பு யுத்தத்தை, நமது தந்திரோபாயமிக்க தற்காப்பு யுத்தத்தால் போர் முனைகளில் தோற்கடிக்க வேண்டும், திம்பு கோரிக்கைக்கு குறைவான அரசியல் தீர்வுகளை முன்னிறுத்தும் சரணாகதி தமிழ்த் தலைமைகளையும் அரசியல் ரீதியாக மக்கள் மத்தியில் தந்து அன்னியப்படுத்த வேண்டும். தை பிறக்கின்றபோது தேசபக்த போராளிகளுக்கு புது வழியும் பிறக்கட்டும்.

ஆசிரியர் குழு

"அடிக்கு அடி", "பழிக்கு பழி" எவ்வாறு கொடுப்பது என்பது சூழ்நிலையை பொறுத்தது. சில சமயங்களில் சமரசப் பேச்சுவார்த்தைக்கு போகாமல் இருப்பது "அடிக்கு அடி" ஆகும். சில சமயங்களில் பேச்சுவார்த்தைக்கு செல்வதுகூட "அடிக்கு அடி" ஆகும்... அவர்கள் தாக்க ஆரம்பித்தால், நாம் திருப்பி தாக்குகிறோம். விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களை தாக்குவதற்கு துணிகின்ற பிற்போக்காளர்களை வன்மையாக அடித்து வீழ்த்தாமல் அமைதியைப் பெறமுடியாது,

(மா.ஓ.)

# விடுதலைப்புலிகளின் தலைமைக்கு தேசபக்தர்களின் பகிரங்க மடல்

போராடும் புலிகளுக்கு; அன்புடையீர்,

தமிழீழ தேசிய விடுதலை இயக்கத்தினை தொடர்ந்து உங்கள் தோள்களில் மட்டும் சுமந்து வருவதற்காக தேசபக்தன் தனது வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கை மேலான இந்திய ராணுவ ஆக்கிரமிப்பின் தொடக்க கால கட்டத்தில் உங்களுக்கு பகிரங்க கடிதம் ஒன்றை வெளியிட்டிருந்தோம். அதில் "தவறுகள் திருத்தப்பட்டு பயணங்கள் தொடர வேண்டும்" என்று கேட்டிருந்தோம். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை அம்பலப்படுத்தி போராடி வெற்றி கொண்டீர்கள். அதிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள், விடுதலை சக்திகள் தமது கவனத்தை உங்கள் மேலும் திருப்பியிருக்கின்றனர். ஆனால் அதற்கு பிந்தைய ஆண்டுகளில் உங்களால் ஈர்க்கப்பட்டவர்களுக்கு நீங்கள் தந்த படிப்பினைகள் எதிர்மறைத் தன்மை கொண்டவை.

தவறுகளைக் களையாமல் பயணத்தை தொடர்ந்தீர்கள். தமிழீழ தேசிய இன விடுதலை யுத்தத்திற்கு எதிரான ஏகாதிபத்திய-பிராந்திய விரிவாதிக்க - சிறீலங்கா பேரினவாத கூட்டை பிரதான பகை முரண்பாடாக கொள்ளாமல் (தமிழீழ மக்கள் மத்தியில்) இலங்கை மக்களுக்கு இடையில் இருந்த முரண்பாடுகளை முதன்மையானதாகவும், பகை முரண்பாடுகளாகவும் நீங்கள் மாற்றியதால் இன்று தமிழீழ, சிறீலங்கா மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு போயுள்ளீர்கள். பிரதான பகை முரண்பாட்டில் நீங்கள் எடுத்த சந்தர்ப்பவாத சார்புநிலை உங்கள் மேல் உலக மக்களை சந்தேகப்பட வைத்துள்ளது.

தமிழீழ வரலாற்றில் மிகப் பெரிய பின்னடைவை தமிழீழ தேசிய விடுதலை இயக்கமும், புலிகளும் இப்பொழுது எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழீழ மக்களின் பிரிந்து போவு

www.tamilarangam.net



துடன்கூடிய சுயநிர்ணய உரிமைப் போராட்டம் அரசியல்-ராணுவ ரீதியில் பின்தள்ளப்பட்டும், பலவீனப்பட்டும் இருக்கிறது.

தமிழீழ தேசிய விடுதலை போராட்டத்தின் மேலான உங்களின் குறுந்தேசிய பார்வையும், சனரஞ்சகமான உடனடி வெற்றியில் நாட்டமும், ஏகாதிபத்தியங்களுக்கு பின்னால் உங்களை ஓட தூண்டுகிற நேரத்தில், ஏகாதிபத்தியத்திற்கும் பிராந்திய விரிவாதிக்கத்திற்கும் எதிரான மக்கள் போராட்டங்களுடன் நீங்கள் அய்க்கியப்படுவதையும் தடுத்து வருகிறது; போராட்டத்தின் நடுநிலை சக்திகளை எதிரி அணிக்கு விரட்டி விட்டதுடன், தேசபக்தர்களையும், புரட்சியாளர்களையும்கூட துரோகிகள் என்று அடையாளப்படுத்தி அழிக்கவும் வைத்தது.

உங்களின் இத்தகைய தடை அழித்தொழிப்புகளுக்காக தேச பக்த முன்னணியினர் கழகம் வண்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அரசியல் முரண்பாடுகளும், மாற்றுக் கருத்துகளும் விமர்சனங்கள் மூலமே தீர்த்துக் கொள்ளப் பட வேண்டும். மாறாக ஆயுத முனையில் அல்ல. இனி வரும் காலங்களில் ஆவது இத்தகைய அழித்தொழிப்புகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கு எதிரான உங்களின் தமிழ் குறுந்தேசிய வெறி சிங்கள, முஸ்லிம் மக்களை பேரினவாதிகளின் பின்னால் அணிவகுக்கச் செய்தது. தமிழீழப் போராட்டத்தின் மேல் சிங்கள மக்களுக்கு இருந்த அய்யப்பாடும் அச்ச உணர்வும் போக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழீழ போராட்டத்திற்கான தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளை அவர்களிடம் எடுத்து சென்றிருந்தால், போராட்டத்தின் வலுவான ஆதரவு சக்தியாக சிங்கள உழைக்கும் மக்கள் பரிணமித்திருப்பார்கள். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. மாறாக அவர்கள் மேல் நிகழ்த்திய உள்நோக்கம் கொண்ட இனப் படுகொலைகள் மூலம் அவர்களை எதிரி முகாமிற்கு செல்ல வைத்தீர்கள்.

ஆனால் அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற பகுதிகளின் மேல் நீங்கள் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளை இனவாத படுகொலைகளாக நாம் கருதவில்லை. எதிரி தனது அரசியல்-ராணுவ நோக்கங்களுக்காக எந்த பகுதி மக்கள் மத்தியிலுள்ள பிற்போக்கு கூட்டத்தை கருவியாக பயன்படுத்துவானேயானால் அப்பிற்போக்குக் கூட்டம் மேல் அரசியல் ராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை போராளிகளுக்கு ஏற்படும். அதே வேளையில் முஸ்லிம் மக்கள் மேலான உங்கள் ராணுவ நடவடிக்கையை நாம் அவ்வாறு கருதவில்லை.

தமக்கென்று வரையறுத்த பூகோளப் பரப்பை கொண்டிராத முஸ்லிம் மக்கள் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களோடும் அதேநேரம் மற்றைய இன மக்களின் விஷேசப் பண்புகளோடு தம்மை அய்க்கியப்படுத்தி இலங்கையில் பரந்து வாழ்கிறார்கள். தமிழீழ பகுதியில் வாழக்கூடிய முஸ்லிம் மக்களின் உரிமைப் போராட்டங்கள் தமிழ் மக்களின் போராட்டத்தோடு பிணைந்து நிற்பது; துணை அங்கமாக இருக்கக்கூடியது. பேரினவாத அரசே இரு மக்களுக்குமான பொது எதிரி. ஆனால் முஸ்லிம் மக்களை எதிரியாக கருதி அவர்களை வடக்கில் இருந்து பெயர்த்து அகதிகளாக்கினீர்கள். சில எல்லைப் பகுதிகளில் படுகொலையும் செய்தீர்கள். இந்த நடவடிக்கைகளை தமிழ் வணிக முதலாளிகளும், இந்து-சைவ மத பீடங்களும் உளப்பூர்வமாக ஆதரித்தனர். இந்த மக்களை 'காட்டிக் கொடுப்பவர்கள்' என்று நீங்கள் அடையாளப் படுத்தியதும்கூட தமிழ் மேல்தட்டு பிரிவினரால் காலம் காலமாய் சொல்லப்பட்டு வருவதே. இது காழ்ப்புணர்வில் சொல்லப்ப்பட்டதே தவிர வேறல்ல. ஏனெனில் இன்று முஸ்லிம்கள் அறவே இல்லாத யாழில்தான் நீங்கள் தோற்றுப் போயிருக்கிறீர்கள். இதுவரையில் அம்மக்கள் குடா பகுதிக்கு திரும்பிவர அனுமதிக்கவில்லை. இந்துமதப் பண்பாட்டு வகைப்பட்ட குறுந்தேசிய பார்வையில் இருந்தே முஸ்லிம் மக்கள் மேலான உங்களின் அடக்கு முறையும் அழித்தொழிப்பும் தோற்றம் பெற்றிருக்கிறது.

உங்கள் இயக்கத்தின் இத்தகைய அடிப்படைத் தவறுகள் ஒவ்வொன்றையும் எதிரி தனக்கு சாதகமாகப் பயன்படுத்தினான், பிரச்சாரப் படுத்தினான். புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று அவனால் கூறமுடிந்தது. முஸ்லிம் மக்களை தமிழீழ போராட்டத்தில் இருந்து நீங்கள் அந்நியப் படுத்திய நேரத்தில், உங்களுக்கு எதிரான அரசியல் ஆயுதமாக அவர்களை மாற்றுவதில் எதிரி வெற்றி கண்டான். ஒரு பகுதியினரை ஆயுதபாணி ஆக்கினான்.

இத்தகைய காரணிகளால் சிறீலங்கா இனவாத அரசின் அரசியல், ராணுவ தளங்கள் விரிவடைந்து புதிய பரிமாணங்களை தொட்டது. 1994க்கு பின் அரசியல் துறையில் எதிரியே முன்னிலை வகித்தான். இறுதியில் உங்கள் இயக்கத்தின் ராணுவ மேலாண்மை உடைக்கப்பட்டு அந்த இடத்தில் அரசு படைகளின் அதிகாரம் நிறுவப்பட்டு வருகிறது.

இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் சிறீலங்கா பேரினவாத அரசு தமிழீழ மக்களின் அடக்குமுறையாளன் மட்டுமல்ல, சிங்கள, மலையக, முஸ்லிம் உழைக்கும் மக்களின் அடக்குமுறையாளனும்கூட. ஏகாதிபத்திய, ஆளும் வர்க்க, அதிகார வர்க்க, இனவாத நலன் சார்ந்த சிறீலங்கா அரசு இலங்கை மக்களின் அரசாகவும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது. தன்னை ஒரு பௌதிக சக்தியாகவே திடப்படுத்திக் கொண்டுள்ளது. ஒரு பௌதிக சக்தியை வீழ்த்த இன்னொரு பௌதிக சக்தியால் மட்டுமே முடியும். தமிழீழ தேசமும் அதன் மக்களும் தன்னளவில் ஒரு பௌதிக சக்தி. ஆனால் புறநிலையில் அது இலங்கை என்கின்ற முழுமையான பௌதிக சக்தியின் ஒரு பிரதான கூறு மட்டுமே.

தமிழீழ தேசிய இன விடுதலை யுத்தம் அதன் இலக்கை அடைவதற்கு, ஒரு சரத்தில் கிரமப்படி தொடுக்கப்பட்ட மணிகளைப் போன்று அனைத்து இன மக்களும் பேரினவாத அரசின் அடக்குமுறைக்கு எதிராக ஓர் அணியில் நிரைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தமிழீழ போராட்டத்தின் வளர்ச்சிக்கும், எதிரியின் வீழ்ச்சிக்கும் இது அவசியமான முதன்மைப் பணியாகும். இதற்கு முரணாக தமிழீழ மக்களின் போராட்டத்தை அதன் முற்போக்கு தன்மை வாய்ந்த உள்ளடக்கத்தில் இருந்து பிரித்து, எல்லாவிதமான வெறுக்கத்தக்க ஆதிக்க பண்புகளின் வடிவமாக புலிகளை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கிறீர்கள் என்பதே உண்மை. இப்போக்கிற்கு காரணமான த.ஈ.வி.புலிகள் இயக்கத்தின் சித்தாந்த அடித்தளம்தான் இலங்கையின் தேசிய இனங்

www.tamilarangam.net



களுக்கு இடையிலான எதிரிகளுக்கு எதிரான அணி சேர்க்கையையும் பிளவுபடுத்தியுள்ளது.

மக்கள் போதிய தியாகம் செய்யாததும், போராளிகள் மற்றும் ஆயுத பற்றாக்குறையும் யாழின் வீழ்ச்சிக்கான காரணங்களாக அறிவித்தீர்கள்.

(i) தமிழீழ மக்களின் அதிலும் குறிப்பாக உழைக்கும் அடித்தட்டு மக்களின் தியாகங்களும், அர்ப்பணிப்புகளுமே தமிழீழத்தின் வரலாறாகவும் புலிகளின் வீர வரலாகவும் இருக்கிறது. அந்த மக்களின் கர்ப்பத்தில் தோன்றியவர்களே இன்று மாவீரர் கல்லறைகளில் துயில்கின்றனர். இருந்தும் நீங்கள் அடித்தட்டு மக்களின் விடுதலையை, நலன்களை முன்னிறுத்தாது மேல்தட்டு மக்களின் நலன்சார்ந்து நிற்கிறீர்கள். எந்த மக்கள் தமிழீழத்தில் சாதிய - அரசியல் -பொருளாதார ஒடுக்குமுறைக்கு உட்பட்டவர்களாய் இருக்கிறார்களோ அம்மக்கள் தமிழீழ போராட்டத்தில் ஸ்தாபனமயமாவதை, ஆயுதபாணியாவதை நிராகரித்து வந்தீர்கள், எதிர்க்கிறீர்கள். உள்ளூர் பிரச்சனைகளின்போது மேல்தட்டு மக்களின் பிரதிநிதியாக உங்களை அடையாளப்படுத்தினீர்கள். இத்துடன் நின்றுவிடாது அவ் அடித்தட்டு மக்களை யாழின் தோல்விக்கான காரணமாக குற்றப்படுத்தியுள்ளீர்கள். மன்னிக்கும் மனப்பான்மை கொண்ட அம் மக்களே போராட்டத்தின், த.ஈ.வி.பு. இயக்கத்தின் பின்னடைவுக் காலங்களிலும் துணை நிற்பவர்கள். உழைக்கும் மக்கள் நலனை முன்னிறுத்துவதே தமிழீழப் போராட்டத்திற்கான முன் நிபந்தனை ஆகும்.

(ii) த.ஈ.வி.பு.களின் தனி இயக்க சர்வாதிகாரம் பிற இயக்கங்களுடனான அரசியல் முரண்பாட்டை ஆயுத மோதல்களாக மாற்றியது. ஆயிரக்கணக்கான பிற இயக்க போராளிகள் அழிக்கப்பட்டனர்; தவிர்க்க முடியாமல் எதிரியிடம் அப்பாவிகள் சரணடைந்தனர். போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டனர். எதிரி மேலான சளரஞ்சகமான தாக்குதல்களும், புலிகள் இயக்கத்துக்குள்ளான ஆயுத மோதல்களும் போராளிகள் இருப்பை கணிசமானளவு குறைத்தது. இதற்கான பிரதான பொறுப்பு புலிகள் இயக்க தலைமையையே சாரும். இது போராட்டத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. நேச சக்திகளுடனான அரசியல் முரண்பாட்டை அரசியல் வழியிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும்.

போராடும் மக்கள் போரை நடத்துவதில் மரபு வழிப்பட்ட முறைகளோடு மட்டும் நின்று விடுவதில்லை. மக்கள் திரள் எழுச்சிகள், புரட்சிகர போர்கள், நாடெங்கிலும் கொரில்லாத் தாக்குதல்கள் பலம் பொருந்திய ஒரு சேனையை வலு குறைந்த ஒரு சேனை முறியடிப்பதற்கான ஒரேயொரு வழி ஆகும். பரந்துபட்ட ஆயுதபாணியான வெகுசனங்களே இதன் ஆதாரக் கூறு. இதனடிப்படையில் தமிழீழத்தின் மக்கள் ஆயுதபாணி ஆக்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு கிராமமும் ஒரு கோட்டையாக மாற்றப்பட்டிருந்தால், கொரில்லா யுத்தமும் ஸ்தாபனமயமான மக்கள் போராட்ட முறையும் சரியான திசைவழியில் இணைக்கப்பட்டிருந்தால் சிறிலங்காவின் கூலிப்படை போர் நடவடிக்கைகளின் தொடக்க நிலையிலேயே முறியடிக்கப்பட்டிருக்கும்.

மேலும் எதிரி தற்காப்பு நிலையில் முகாம்களுக்குள் இருந்தபோது அதை மூலோபாய ரீதியான எதிரியின் பின்வாங்குதலாக கணிப்பிட்டதுடன் குடாவை விடுவிக்கப்பட்ட பிரதேசமாகவும் கொண்டீர்கள். ஓர் அரசின் நிலைபெற்ற தன்மைக்கு அடிப்படையான பௌதிக கூறுகளை கொண்டிராத ஒரு தமிழீழ அரசையும் உருவாக்கினீர்கள். குடா பகுதியில் ராணுவம் முகாம்களுக்குள் முடங்கி இருந்தது அவனின் மூலோபாய ரீதியிலான தற்காப்பு கட்டமாகவே கருத வேண்டும். முடங்கியிருந்தானே தவிர ஓய்ந்து போகவில்லை. வலுவானதொரு யுத்தத்தை புரிவதற்கு தன்னை அரசியல் ராணுவ ரீதியில் தயார் செய்து வந்தான்.

யாழ், கிளிநொச்சி ராணுவ நடவடிக்கைகளின் வெற்றிக்கு சிறீலங்கா அரசின் படைபலம், அரசியல் பலம் மட்டும் காரணமாக இருக்கவில்லை. த.ஈ.வி.பு. இயக்கத்தின் குறுந்தேசிய சிந்தனை-செயல்பாடு, மக்கள் யுத்த முறையை மறுதலித்து நிற்பது போன்ற அடிப்படைத் தவறுகள் எதிரியின் வெற்றிக்கான கதவுகளை திறந்து விட்டுள்ளது.

1987-ல் அரசியல் ராணுவ ரீதியிலான வரலாற்று மோசடிமிக்க இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை தனது ராணுவத்தின் துணையுடன் தமிழ் மக்கள் மேல் இந்திய விரிவாதிக்க அரசு திணிக்க முற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில்கூட தமிழீழ மக்களின் உரிமையையும், வாழ்வையும் உறுதி செய்யக்கூடிய தமிழீழத்திற்கு மாற்றான ஒரு தீர்வுத் திட்டத்தை நீங்கள் வெளிப்படையாக வைத்து எதிரியை எதிர்க்கவில்லை. வல்லரசுகளுடனான இலாப நஷ்ட கணக்கில் இருந்தே இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தை எதிர்த்தீர்கள். துரோகத்தனமான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் நீங்கள் நிராகரிக்க முன்வந்ததும் இவ் அடிப்படையில்தான். விரிவாதிக்க அரசின் ராணுவத்தை எதிர்த்து நின்றீர்களே ஒழிய இந்திய அரசின் விவாதிக்கத்தை அல்ல.

அதேபோன்று 1995-ல் சந்திரிகா அரசும் அரசியல் ராணுவ ரீதியிலான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து, பிராந்திய விரிவாதிக்க அரசுகள் மற்றும் உலக வல்லரசுகளின் துணையுடன் இன அழித்தொழிப்பு யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. அமைதியின் மேல் உள்ள தீவிர விருப்பத்தால் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. யுத்தம் நடத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் சிறிலங்கா அரசிற்கு தொடர்ந்து இருந்து வருகிறது. யுத்தம் வெறுமனே ராணுவ உள்ளடக்கத்தை கொண்டதாக இருக்காமல் அதற்கு ஒரு அரசியல் உள்ளடக்கத்தையும் கொடுத்ததன் மூலம் யுத்த நீடிப்பிற்கு ஒரு காரணத்தை கற்பித்துக் கொள்ள முயல்கிறது. சந்திரிகா அரசின் மேல் உங்களுக்கு இருந்த மயக்கமும், சந்திரிகாவின் காய் நகர்த்தலை வெறுமனே ராணுவ கண்ணோட்டத்தில் மதிப்பிட்டதும் எதிரி விரித்த வலையில் த.ஈ.வி.பு. இயக்கம் சிக்கிக் கொள்வதற்கு ஏதுவாக இருந்து விட்டது. ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்திற்கு இனவாதிகளும், அரசும் என்றுமே தயாராய் இல்லை. தமிழீழ தேசிய இன பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவர ராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

1985-ல் முன் வைக்கப்பட்ட திம்பு கோரிக்கை பரந்த மட்டத்தில் ஆதரவை பெற்ற ஒன்று. தமிழ் மக்களின் சனநாயக கோரிக்கையை அது உள்ளடக்கத்தில் கொண்டுள்ளது. அன்று உங்களாலும், துரோகக் குழுக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இன்று திம்புக் கோரிக்கையைக்கூட கைவிட்டு நிற்பது

www.tamilarangam.net



தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகும். 1995-ல் சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்திற்கு மாற்றாக திம்புக் கோரிக்கையை நீங்கள் முன்வைத்திருந்தால் சந்திரிகாவின் சமாதான வேசத்தை நீங்கள் கலைத்து இனவாத முகத்தை அம்பலப்படுத்தியிருக்க முடியும். இனவாத அரசுடன் கூட்டு சேர்ந்திருக்கும் துரோக அமைப்புகளையும் அரசுக்கு எதிராக நிறுத்தியிருக்க இயலும். பின் தள்ளப்பட்டிருக்கும் போராட்டத்தினை பண்புரீதியிலான அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இட்டுச் செல்ல திம்பு கோரிக்கையை முன்வைப்பது மிக அவசியமானது. இதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை. மாறாக இதற்கான அவசியம் அதிகரித்து வருகிறது. தமிழ் மக்களின் தனித்துவத்தையும், அடையாளத்தையும் அபாயத்திற்கு உள்ளாக்கக்கூடிய சந்திரிகா அரசு முன்வைத்த தீர்வுத் திட்டம் எரிக்கப்பட வேண்டியது.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்ற உங்கள் வாசகம் பிரசித்தி பெற்றது. தமிழீழமே தமிழ் மக்களின் கோரிக்கை. தமிழிழ தேசபக்த முன்னணியினர் கழகமும் இதையே முன்வைக்கிறது. ஆனால் எமது கேள்வி விரிவாதிக்க நாடுகளை - உலக வல்லரசுகளை எதிர்த்து நின்றா? அல்லது சார்ந்து நின்றா? இந்த லட்சியப் பயணத்தைத் தொடர்வது என்பதே.

இனவாத அரசிற்கு எதிரான தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சாராம்சத்தில் வல்லரசுகளுக்கும், இந்திய விரிவாதிக்கத்திற்கும் எதிரான போராட்டமே. இறையாண்மையுள்ள தமிழீழம் தான் குறிக்கோள் எனில் பிராந்திய அரசுகள் - உலக வல்லரசுகளுக்கு எதிராக அவற்றை எதிர்த்து போராடும் மக்களுடன் ஒன்றுபட்டு ஒரு இடையறாத நீண்டகால போராட்டத்தை, யுத்தத்தை நடத்துவதன் மூலமே தமிழீழம் சாத்தியம்.

இந்திய அரசு தனது விரிவாதிக்கக் கரங்களை தெற்காசியாவின் மேல் பரப்புகிறது. உலக வல்லரசுகளின் சந்தை ஆதிக்கத்திற்கான, ராணுவமயமாக்கலுக்கான போட்டி அரங்காகவும் இப்பிராந்தியம் வெகு வேகமாக மாற்றப்பட்டு வருகிறது. இந்த சூழலில்தான் துணைக் கண்டத்தில் தேசிய இனங்களின் போராட்டங்களும் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறது. பிராந்திய அமைதி, இனங்களுக்கு இடையிலான சமத்துவம், நல்லிணக்கம்தான் ஒரு குறித்த தேசிய இனத்தின் சுதந்திரத்திற்கும் அமைதிக்கும் உத்தரவாதம் அளிக்கக்கூடியது. இப் பிராந்திய மக்களின் விடுதலை என்பதும் தமிழீழ விடுதலை என்பதும் ஒரு நாணயத்தின் பிரிக்க முடியாத இரு பக்கங்களை போன்றது. வளர்ந்துவரும்போராட்டங்கள்பிராந்திய அரசின்- உலக வல்லரசிய நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதால் அவற்றை அழித்தொழிக்கவே இவ் அரசுகள் முற்படும். கடந்த தசாப்தத்தில் தமிழீழ போராட்ட வரலாற்றை இதற்கு சிறந்த உதாரணமாக கொள்ள முடியும். இந்திய விரிவாதிக்க அரசும், உலக வல்லரசுகளும் தமிழீழ மக்களின் உரிமைக்கு பாதுகாவலராக இருக்க முடியாது; நடுநிலை பாத்திரம் வகிக்கவும் இயலாது என்பதே இப்பிராந்தியத்தின் அரசியல் நிகழ்வுகள் மற்றும் தமிழீழ போராட்ட வரலாற்றில் இருந்தும் கற்றுக் கொள்ளக் கூடிய பாடம்.

பிராந்திய விரிவாதிக்க அரசின் ஆக்கிரமிப்பு ராணுவத்தை முதலில் எதிர்த்து வென்ற பெருமை தமிழீழ மக்களையும் உங்களையும் சாரும். ஆனால் அந்த பணி தொடரப்படவும் இல்லை; நிறைவடையவும் இல்லை. இந்திய அரசிடம் இப்பொழுது நீங்கள் மறைமுகமாக நீட்டும் நட்புக்கரம் தமிழீழப் போராட்டத்தையும், இப்பிராந்திய மக்களின் போராட்டங்களையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடியது.

1987-ல் பிராந்திய விரிவாதிக்க ராணுவத்தை எதிர்க்க உலக வல்லரசுகளையும், சிறீலங்கா அரசையும் நாடினீர்கள். இன்று உலக வல்லரசுகளிடம் இருந்து தனிமைப்பட்டு போயுள்ள நிலையில் பிராந்திய விரிவாதிக்க அரசிடம் நேசக்கரம் நீட்டுகிறீர்கள். வல்லரசுகளே கதி என இருந்தால் தமிழீழ தாகம் என்பது இரத்த தாகமாக மட்டுமே இருக்கும். நாளை மலரக்கூடிய தமிழீழம் அடிமைத் தமிழீழமாகவே பெயர் பெறும். ''இதுவரை காலமும் சிந்திய இரத்தமும், இழப்பும் நெருப்பும் இன்னொருவனுக்கு அடிமையாகவா'' என்ற வரிகள் அதை படைத்த கவிஞனின் குமுறல் மட்டுமல்ல அதுவே தேசத்தின் கொதிப்பாகவும் உள்ளது.

பாரிய நெருக்கடிக்குள்ளும், பின்னடைவிற்குள்ளும் தள்ளப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மீட்டெடுக்க வேண்டிய கடமை தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு உள்ளது. உங்கள் இயக்கத்தின் அழித்தொழிப்பையும், அடக்கு முறையையும் எதிர்கொண்டே அவர்கள் இப்பணியை தொடர வேண்டியுள்ளது. இருந்தும் எதுவித காழ்ப்புணர்வும் இல்லாமல் எதிரிக்கு எதிரான போராட்டத்தில் சகோதர சக்திகள் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய அவசியத்தை தேசபக்தர்கள் என்றும் புறக்கணிக்கவில்லை. போராட்டத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததான கீழ்க்கண்ட நிலைப்பாடுகளில் நீங்கள் பகிரங்கமான நிலைப்பாட்டை எடுப்பது சிறீலங்கா அரசிற்கும் மற்றும் வல்லரசுகளுக்கும் எதிராக போராடும் சக்திகளுடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

- சிறீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தையில் திம்பு கோரிக்கையை முன்னிறுத்த வேண்டும். அதன்மூலம் சனநாயக சக்திகளை போராட்டத்தின் பக்கம் வென்றெடுக்க வேண்டும்.
- சிறீலங்கா அரசிற்கு எதிராக போராடும் அனைத்து அமைப்புக்கள் மீதான தடையை நீக்க வேண்டும். அவர்களை அழித்தொழிப்பதை, சிறைப்படுத்துவதை நிறுத்த வேண்டும்.
- இந்திய விரிவாதிக்கத் தலையீட்டை பகிரங்கமாக எதிர்க்க வேண்டும்.
- அமெரிக்கா தலைமையிலான உலக வல்லரசுகளை பகிரங்கமாக எதிர்க்க வேண்டும்.

இக் கடமையை நீங்கள் முன்னெடுக்கும்போது உங்கள் இயக்கம் மேலும் பாரதூரமான பின்னடைவுக்கு தள்ளப்படலாம். இப்பணியில் நீங்கள் மரணத்தைத் தழுவலாம். ஆனாலும் உங்கள் தியாகங்கள் வீண் போக மாட்டாது. கொண்ட லட்சியத்திற்கு முன்நிபந்தனைகளாக உள்ள இவையே, தமிழீழ மக்களை அவர்களை பிணைத்துள்ள அடிமைத் தளைகளில் இருந்து விடுவிப்பதற்கும் முன்நிபந்தனைகளாக உள்ளது. தமிழீழத்தை பெறுவதில் நீங்கள் காட்டும் உறுதிபோல் மேற்சொன்ன நிலைப்பாடுகளை எடுப்பதிலும் உறுதி காட்டுவீர்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளானால் தேசபக்த சக்திகளதும், புரட்சியாளர்களது ஆதரவும் ஒத்துழைப்பும் தமிழீழ தாகமுள்ள உங்களுக்கு தொடரும். தமது சுதந்திரத்திற்காக தமிழீழ மக்கள் விலையாகக் கொடுத்த தியாகங்களுக்கும், இதுவரை மாவீரர்களான புலிப் போராளிகள் சிந்திய இரத்தத்திற்கும் நீங்கள் செலுத்தும் உண்மையான வீர வணக்கம், மேற்சொன்ன கொள்கைகளை பகிரங்கமாக அறிவித்து போராட்டத்தை-யுத்தத்தை தொடர்வதாக இருக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பு குழு,
தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் (PVOT).

# ஏகாதிபத்திய சீரழிவுப் பண்பாடும் - உலக அழகிப் போட்டியும்

1996-ம் ஆண்டிற்கான உலக அழகிப் போட்டி இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூரில் கார்த்திகை 23-இல் நடந்து முடிந்துள்ளது. 89 நாடுகளைச் சேர்ந்த அழகிகள்(?) இதில் கலந்து கொண்டனர். பெங்களூரில் உள்ள கிரிக்கெட் மைதானத்தில் நேரடியாக இந்தப் போட்டியை 25,000 பேரும் உலக அளவில் 300 கோடி மக்களும் செயற்கைக் கோள் தொலைக்காட்சி மூலம் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையிலும் அரச, தனியார் தொலைக்காட்சிகள் விழுந்தடித்துக் கொண்டு ஒளிபரப்பு செய்தன.

இந்தப் போட்டியை இந்தியாவில் நடத்த தரகு முதலாளியும் சினிமா நடிகனும் போர்பாக்ஸ் பீரங்கி பேர ஊழல் மன்னன் ராஜீவின் நண்பனும் அதில் சம்பந்தப்பட்டவருமான அமிதாப் பச்சன் என்பவரே, தனது அமிதாப்பச்ச கூட்டு நிறுவனம் (ABCL) மூலம் ஒப்பந்தம் செய்து அதை பெங்களூரில் நடத்தியுள்ளார். அதற்கு விளம்பரதாரராக இன்னுமொரு தரகு முதலாளி கோத்ரேஜ்யும் அவருடைய நிறுவனமும் பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்திய மத்தியரசும், கர்நாடக மாநில அரசும் ஒரு கட்சியின் ஆட்சியின் கீழ் இருப்பதால் பேரம் பேசுவதில் அமிதாப்பச்சனுக்கோ, பன்னாட்டு நிறுவனங்களுக்கோ எந்த சிக்கலும் இருக்கவில்லைப் போல் தெரிகிறது. ஏனெனில் இந்த ஆபாச அரங்கேற்றத்திற்கு முதல் கூட்டமே கர்நாடக சட்டசபையில் தான் நடந்துள்ளது. ஐப்பசி 30-ந் திகதி இந்தக் கூட்டம் நடைபெற்ற போது "உலக அழகிப் போட்டி எதிர்ப்பாளர் ஒருங்கிணைப்பு அமைப்பு" என்ற பெயரில் பல்வேறு பெண்கள் அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் (NGO's) , முற்போக்கு, புரட்சிகரப் பெண்கள் அமைப்புக்கள், மாணவர் இளைஞர் அமைப்புக்கள், மாதர் சங்கங்கள், சுதேசி இயக்கங்கள், கர்நாடக விவசாயிகள் சங்கம், கர்நாடக விடுதலை முன்னணி என எல்லோரும் கூட்டாக சேர்ந்து போராட்டமும், எதிர்ப்பு ஊர்வலமும் நடத்தியுள்ளனர். பாராளுமன்ற எதிர்க்கட்சியான BJP போன்ற மத அடிப்படைவாதிகளும், CPM போன்ற திரிபுவாதிகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தியுள்ளனர். பரவலான இந்த எதிர்ப்புகளைக் காரணம் காட்டி பெங்களூரில் கார்த்திகை 9 - 24ந் திகதிவரை தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்துள்ளது. உலக அழகிப் போட்டிக்கு மாநில அரசு 12500 போலீசாரையும், மத்திய பாதுகாப்புப் படை, துணை இராணுவப் படையின் 12 பிரிவுகள், தேசிய பாதுகாப்புப் படை, எல்லைப் பாதுகாப்புப் படை, பெண் போலீஸ் படை இவற்றிலிருந்து தலா 2 பிரிவுகளும், அதிரடிப்படை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை இவற்றிலிருந்து தலா 3 பிரிவுகளும் இவை தவிர பம்பாயிலிருந்து வெடிகுண்டுப் பிரிவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில போட்டிகள் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இந்திய விமானப் படைத் தளத்திலும் நடைபெற்றுள்ளது. பாதுகாப்புக்கு மட்டும் மாநில அரசு 5 கோடி ரூபாய் வரை செலவு செய்துள்ளது. இதில் அமிதாப் பச்சன் நிறுவனம் 2 ¼ கோடியை அரசுக்கு திருப்பி செலுத்தியுள்ளது. 75 இலட்சம் ரூபாய்கள் ஊனமுற்ற குழந்தைகளுக்கு வழங்கியுள்ளது. இது ஒரு கண்துடைப்பு வேலையே.

சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய போலீசையும் நாட்டைக் காக்க வேண்டிய இராணுவத்தையும் இந்திய மக்களின் வரிப்பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்து உலக அழகிகளைப் பாதுகாக்க வைத்துள்ளது இந்திய அரசு. தனியாருக்குச் சொந்தமான ஐந்து நட்சத்திர ஆடம்பர உல்லாச விடுதிகள் பல இருந்தபோதும் சட்டசபையிலும் விமானப்படைத் தளத்திலும் கூட்டங்களும் போட்டிகளும் நடத்த அனுமதியளித்துள்ளது.

30 ஆண்டுகளாக நடைபெறும் இந்த உலக அழகிப் போட்டிக்கு வேறு சில நாடுகளிலும் முன்னர் எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு இந்தியாவில் உருவான பலமான எதிர்ப்பு வேறு எங்கும் இதுவரை ஏற்பட்டதில்லை. ஓரளவு இந்திய நாடு பூராவும் எதிர்ப்பு அலைகள் காணப்பட்டபோதிலும் நியு டெல்கி, சண்டிகர் மற்றும் தமிழ்நாட்டிலும் எதிர்ப்பு ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டமும் அமிதாப்பச்சன் உருவப் பொம்மைக்கு செருப்பு மாலை போடுவது, எரிப்பது உள்பட சில போராட்டங்கள் நடைபெற்றுள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டில் மக்கள் பண்பாட்டுப் பேரவை, மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பு மற்றும் CPM (திரிபு)இன் மாணவர், இளைஞர், பெண்கள் அமைப்புக்கள் என பலரும் எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளனர். CPM-இன் மாணவர் அமைப்பைச் சேர்ந்த மாணவர் ஒருவர் மதுரை பேருந்து (Bus) நிலையத்தில் தீக்குளித்து மரணமடைந்ததும் தெரிய வந்துள்ளது.

21 அமைப்புக்களின் கூட்டமைப்பில் முற்போக்கு, புரட்சிகர பெண்கள் அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்களின் பெண்கள் அமைப்புக்கள், முதலாளித்துவப் பெண்கள் அமைப்புக்கள், கட்டிடத் தொழிலாளர்கள் எனப் பலரும் அடங்குவர். பேராசிரியர் நஞ்சுண்ட சாமி தலைமையிலான 'கர்நாடக விவசாயிகள் சங்கம்' ஏற்கனவே அமெரிக்காவின் சில பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து போராட்டங்களை நடத்தியுள்ளது. உலக அழகிப் போட்டி எதிர்ப்பிலும் ஆரம்பத்

www.tamilarangam.net



நுகர் பொருட் பண்பாட்டை ஊக்குவிக்கவும், ஆடம்பரப் பொருட்களின் சந்தையை உலகு தழுவிய அளவில் விரிவுபடுத்தவும் உபயோகமாகின்றன. பெப்சிகோலா, கொக்கோ கோலா, மதுபானங்கள், சிகரெட், சவர்க்காரம், எண்நெய், வாசனைத் திரவியங்கள், தொலைக்காட்சி, வானொலி, அழகு சாதனப் பொருட்கள், பாதணிகள், மருந்து வகைகள், தைலங்கள், துணிவகைகள், விளையாட்டு உபகரணங்கள் என அனைத்து வகைப் பொருட்களுக்கும் கிரிக்கெட் வீரர்கள், உலக அழகிகள் மூலம் 3 நிமிடங்களுக்கு ஒருமுறை விளம்பரம் செய்யப்படுகின்றது. ''இந்த வீரர்கள்போல், அழகிகள் போல் நாங்களும் இந்தப் பொருட்களைப் பயன்படுத்தினால் மாறலாம்'' என்ற தவறான சிந்தனைப் போக்கு அனைத்து பிரிவு மக்களிடத்திலும் புகுத்தப்படுகின்றது. குறிப்பாக பெண்கள், இளைஞர்கள் மத்தியில் ஆடம்பரப் பொருட்களின் மேலான கவர்ச்சியும், வெளிநாட்டு மோகமும் வேகமாக குறுக்கு வழிகளில் பணம் சம்பாதிப்பதற்கு தவறான வழிகளைத் தேட நிர்ப்பந்தித்துள்ளது. சுதேசிய உணர்வு, அடக்குமுறைகளை எதிர்த்து போராடுவது, சுயமான சிந்தனை, திறமை, ஆளுமை, சமூகப் பிடிமானம் அற்றவர்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றனர். ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் சீரழிவுப் பண்பாட்டிற்கும் சந்தை விரிவாதிக்கத்திற்கும் ஏற்ற முறையில் மக்கள் மனநிலை மாற்றப்பட்டு வருகின்றது. இதற்கு இந்த வகையான போட்டிகள், ஏகபோக நிறுவனங்களிற்கு இடையேயான சந்தைப் போட்டிகளில் சந்தைகளைத் தக்கவைத்துக் கொள்ளவும், மக்கள் மத்தியில் இருந்து எழும்பும் எதிர்ப்புக்களிலிருந்தும் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளவும் அவசியப்படுகிறது.

சர்வதேச அழகுப் போட்டிகள், EXPO பொருட்காட்சிகள், கிரிக்கெட் போட்டிகள் மூலம் எய்ட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோய்களும், போதை மருந்துப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. சிறீலங்கா அரசு சுற்றுலாத் துறை மூலம் அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதற்காக பாலியல் சுற்றுலாவை (Sex Tourism) ஊக்குவித்து வருகின்றது. இதன் விளைவாக 30,000 சிறுவர் சிறுமியர் ஓரினச் சேர்க்கைக்கும் பாலியல் வக்கிர உணர்வுகளுக்கும் பலியாக்கப்படுகின்றார்கள். கொழும்பில் இருந்து காலி வரையுமான கரையோர கடற்கரை உல்லாச விடுதிகளுக்கு (Beach Hotels) சிறுவர் சிறுமியர் விபச்சாரத்திற்காக விற்கப்படுகின்றார்கள். செயற்கை கோள் ஒளிபரப்புக்கள் மூலம் ஓரினச் சேர்க்கை, முறைதவறான பாலியல் உறவுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

பன்னாட்டு நிறுவனங்களின் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் ஊக்குவிக்கப்படும் ஆபாச சிந்தனை எதிர்கால இளைஞர்களையும், பெண்களையும் எத்தகைய பண்பாட்டுச் சீரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு இலங்கையும் நல்ல உதாரணம்.

புலிகள் தமிழீழத்தில் தமிழ் சினிமாப் படங்கள், மக்களின் போராட்ட உணர்வை 'மழுங்கடிப்பதாகவும், ஆபாசத்தை விதைப்பதாகவும் கூறி தடைசெய்து, தனிநபர் சாகசவாதப் படங்களான Rambo போன்ற சினிமாக்களை ஒளிபரப்பும் போது, மறுபக்கம் சிறீலங்கா இராணுவம் பாலியல் வக்கிர உணர்வுகளைத் தூண்டும் ஆபாச நீலப் படங்களை இராணுவ முகாம்களிலிருந்து ஒளிபரப்பி வருகின்றது.

இனவெறி யுத்தத்தால் சொந்த நாட்டிலேயே மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதும், அகதி முகாம்களிலும், குடா நாட்டின் தினசரி இராணுவத்தாலும் ஊர்காவல் படையாலும் இளைஞர்களும் பெண்களும் கைது செய்யப்படுவதும் விசாரணை ஏதுமின்றி சுட்டுக் கொல்லப்படுவதும், குறிப்பாக பெண்கள் பாலியல் பலாத்காரப்படுத்தப்படுவதும் பின் கொலை செய்யப்பட்டு வீசப்படுவதும் நாளாந்த விடயமாகிவிட்டது. யாழில் தமிழ்ப் பெண்கள் சிறீலங்கா இராணுவத்தினரையும் ஊர்காவல் படையில் உள்ள குண்டர்களையும் திருமணம் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

மறுபுறம் கல்வி, வேலை இல்லாப் பிரச்சனை, விலைவாசி, பணவீக்கம், தனியார்மயமாக்கல், ஆட்குறைப்பு, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தொழிலாளர்களுக்கு உயிருக்கும், தொழிலுக்கும் பாதுகாப்பற்ற நிலைமை, சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழிற்சங்கம் கட்ட உரிமை இல்லை, விவசாயத்திற்கு மானியம் இன்மை, இடுபொருட்களின் விலையேற்றம், கடன், வறட்சி, நீர்ப்பாசன வசதி இன்மை, மின்சாரத் தட்டுப்பாடு என மக்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாது அல்லாடிக் கொண்டிருக்கின்றனர். விவசாயிகள் பயிர்களுக்குத் தெளிக்கும் கிருமி நாசினிகளைக் குடித்து குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ளும்போத (தற்கொலையில் இலங்கைதான் முதலிடத்தில் இருப்பதாக ஐ.நா. அறிக்கை கூறுகிறது) பெப்சி கோலாவும், கொக்கோ கோலாவும் அனைத்து மக்களின் குளிர்பானங்களாக விளம்பரப்படுத்தப்படுகிறது. ஜொனி வோக்கர் நிறுவனத்தின் புதிய வகை பீர் குழந்தைகளுக்கும் ஏற்ற பானமாக அறிமுகப்படுத்தப்படுகிறது. கல்லோயா தென்னஞ்சாராயமும், Blue Label Arrack-க்கும் குடும்பத்திற்கும் பண்டிகைகளுக்கும் ஏற்ற பானங்களாக விளம்பரம் செய்யப்படுகிறது.

சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் மக்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதமற்று, உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பற்று இருக்கும்போது, பாதுகாப்பான உடலுறவுக்கும் 'எய்ட்ஸ்' வராமல் தடுப்பதற்கும் ஆணுறை பயன்படுத்துங்கள் என்று விளம்பரம் செய்யப்படுகிறது. அனைத்து வகை நோய்களும் இறக்குமதி செய்யப்பட்டு அவற்றிற்கான மருந்துகளும் இறக்குமதி செய்யப்படுகின்றது. சந்தைப் பொருளாதாரமும் நுகர்வுப் பொருட் பண்பாடும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கையையும் சமூக உணர்வையும் சமூகப் பிடிமானத்தையும் சிதைப்பதுடன், மக்கள் தங்கள் வாழ்வியல் இருப்புக்கான போராட்டங்களில் இருந்தும் அந்நியப்பட வைத்துள்ளது. பொறுப்பற்ற, ஊதாரித்தனமான குடும்ப உறவுகளும் குடும்பங்களின் உடைவுக்கும் தூண்டுகோலாக உள்ளது.

சந்திரிகா அரசின் இனவெறி யுத்தம் இன்று தமிழீழப் பெண்களை குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் சிதைத்துக் கொண்டிருக்கின்றது. புலிகள் இயக்கத்தின் 'சுதந்திரப் பறவைகள்' சிறீலங்கா இராணுவத்தை எதிர்த்து யுத்தம் புரிகின்ற போதும், பெண் போராளிகள் யுத்தத்தில் முன்னேறுவதில் பல பிரச்சனைகளை முகம் கொள்ள வேண்டியுள்ளது. இயக்கங்களின் எதேச்சாதிகாரப் போக்குகள் பெரும்பான்மையான தமிழீழப் பெண்களின் போராட்டத்தில் இருந்து மேலும் மேலும் அந்நியப்பட வைக்கின்றது. தமிழீழத்திலும் சிறீலங்காவிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்நாட்டிலும் புலம் பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தளத்தில் பல்வேறு பிரச்சினைகளை நேரடியாக சந்தித்தவண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தமிழ் ஈழப் பெண்கள்.

மேற்கத்திய பண்பாட்டு மோகம் தமிழீழத்தவர்கள் மத்தியில் மிக மோசமான பண்பாட்டுச் சீரழிவுகளை உருவாக்கியுள்ளது. ஒருபுறம் நிலப்பிரபுத்துவத்தின் அடிமைப் பண்பாட்டை தமிழர் பண்பாடாக வரிந்துகட்டிக் கொண்டுள்ள நிலைமையும், மறுபுறம் புலம்பெயர்ந்த நாடுகளிலும் சிறீலங்காவிலும் ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் சீரழிவுப் பண்பாட்டிற்கும் நிலப்பிரப்புத்துவத்தின் அடிமை பண்பாட்டிற்கும் இடையில் சிக்கித் தவிக்கின்றனர். மூன்றாந்தர தமிழ் சினிமாவும், ஆபாசப் பத்திரிகைகளான ஆனந்த விகடன், குமுதம், கல்கி, ராணி, தேவி, குங்குமம், மங்கையர் மலர், 'பெமினா', Move, Star Dust, ... போன்ற சஞ்சிகைகள் மூலம் ஆணாதிக்க சிந்தனை கொண்ட அழகு பற்றிய கருத்தியல் இவர்களால் உள்வாங்கிக் கொள்ளப் படுகிறது. புலம் பெயர்ந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் இளைய தலைமுறையினர் மத்தியில் அழகு, தமிழ் சினிமா நடிகைகளை, உலக அழகிகளை, உள்ளூர் அழகிகளை வைத்தே நிர்ணயம் செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டு நடிகைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்து தங்க நகைகள் பரிசளிப்பதும், தமிழ் சினிமா மோகமும் அதை ஆதாரமாகக் கொண்டு தமது வாழ்க்கையையும் அமைக்கும் நிலைக்கும் தரம்தாழ்ந்து போயுள்ளனர். மேற்கு ஐரோப்பிய மற்றும் கனடாவில் வாழும் தமிழீழ இளைஞர்களில் மிகச் சிறுபகுதியினர் தற்போது வெள்ளைத் தோல் கொண்ட பார்ப்பனியப் பெண்களைத் தேடி தமிழகத்திற்கு படையெடுத்து செல்கிறார்கள். பெண் வீட்டாருக்கு 1-2 லட்ச ரூபாய்கள் வரை கொடுத்தும், சீதனம் வாங்காதும் திருமணம் செய்து தாம் வாழும் நாடுகளுக்கு அழைத்துச் செல்கின்றனர். ஆணாதிக்க சிந்தனை எதிர்பார்க்கும் கற்பு ஒழுக்கம், அழகு பற்றிய மதிப்பீடு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அடங்கி ஒடுங்கிப் போகும் பண்பாடும் தமிழீழப் பெண்களிடம் அருகிவிட்டதாக இவர்கள் நினைக்கிறார்கள்.

தேசிய இன அடக்குமுறை யுத்தத்தின் கொடூரம் தமிழீழப் பெண்களை போராட்டத்திற்கு முன்தள்ளிய போதும், ஆணாதிக்க, சமூக, பொருளாதார, பண்பாட்டு ஒடுக்குமுறையில் இருந்து அவர்களல் இன்னும் வெளிவரமுடியவில்லை. தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை ஏவிவிட்டுள்ள சிறீலங்கா அரசுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராக பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதுடன், பெண்களை அடிமைப்படுத்துகின்ற, சிந்திக்க விடாது தடுக்கின்ற, பிற்போக்கு நிலப்பிரபுத்துவ பண்பாட்டிற்கும், பெண்களை விளம்பரப் பண்டமாகவும், ஆபாச உடற்கவர்ச்சிப் பிண்டங்களாக மாற்றுகின்ற வல்லரசிய சீரழிவு பண்பாட்டிற்கும், ஆணாதிக்க கருத்தியலுக்கும் எதிராக ஏககாலத்தில் போராட வேண்டியுள்ளது. பரந்துபட்ட தமிழீழப் பெண்கள் தங்களை அமைப்பாக்கி கொள்வதும், அதற்காக சிந்திப்பதும் கருத்துப் போக்குகளை உருவாக்குவதும் உடனடி வேலை. சுதந்திர தமிழீழம் என்பது தமிழீழப் பெண்களின் விடுதலையுடன் மட்டுமே சாத்தியமானது.

சோபா

# வையகத்தை வெற்றிகொள்ள

என் இனிய தோழிகளே
இன்னுமா தலைவார
கண்ணாடி தேடுகிறீர்
சேலைகளை சரிப்படுத்தியே
வேலைகள் வீணாகின்றன
வேண்டாம் தோழிகளே
வேண்டாம்

காதலும் கானமும்
எங்கள் தங்கையர் பெறுவதற்காய்
எங்கள் கண் மையையும்
இதழ் பூச்சையும்
சிறிது காலம் தள்ளி வைப்போம்
எங்கள் இளம் தோள்களில்
கடமையின் சுமையினை
ஏற்றிக் கொள்வோம்

ஆடையின் மடிப்புக்கள்
அழகாக இல்லை என்பதற்காக
கண்ணீர் விட்ட நாட்களை
மறப்போம்
வெட்கம் கெட்ட
அந்த நாட்களை
மறந்தே விடுவோம்

எங்கள் தோழிகள் பலரும்
உலகில் இன்று
கண்மையையும் இதழ்ப்பூச்சையும்
மறந்து போயினர்
ஆனால்
தமது மணிக்கரத்தை
பிணைத்த விலங்கை
அறுத்தனர்

வாருங்கள் தோழிகளே
நாங்களும் வழிசெய்வோம்
மண்ணால் கோலமிட்டு
அழித்தது போதும்
எங்கள் செந்நீரில் கோலமிட்டு
வாழ்க்கை கோலத்தை
மாற்றி வரைவோம்
வாருங்கள் தோழிகளே

சரிகை சேலைக்கும்
கண்ணிறைந்த காதலர்க்கும்
காத்திருந்த காலங்கள்!
அந்த வெட்கம் கெட்ட
காலத்தின் சுவடுகளை
அழித்து விடுவோம்

புதிய வாழ்வின்
சுதந்திர கீதத்தை
இசைத்துக் களிப்போம்

வாருங்கள் தோழியரே.

1986 - சிவரமணி

www.tamilarangam.net



# சகோதர யுத்தம்: தமிழீழத்தில் மட்டுமல்ல... குர்திஷ்தான், ஆப்கானிஸ்தானிலும் கூட!




உலகில் இன்று நடக்கின்ற தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் குர்திஷ்தான் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டமும் முக்கியமான ஒன்று. பிற தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் இருந்து இப் போராட்டம் ஒரு முக்கியமான வேறுபாட்டைக் கொண்டுள்ளது. காலனிய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட நாடுகளின் எல்லைகள், அரசு வடிவங்கள் ஒருவகை. காலனி எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்களின் போது வல்லரசுகளும், அவற்றின் பிரித்தாளும் சூழ்ச்சியுடன் உடன்பட்ட உள்நாட்டு ஆளும் வர்க்கங்கள் கூட்டாக உருவாக்கிக் கொண்ட நாடுகளின் எல்லைகள், அரசு வடிவங்கள் இன்னொரு வகை.

ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள், உள்நாட்டு இன ஒடுக்குமுறை அரசுகளையும், ஆளும் வர்க்கத்தையும், வல்லரசுகளையும் எதிர்த்து நடத்தப்படுகிறது. ஒரு நாட்டில் ஒடுக்கப்படும் தேசிய இனம் அந்நாட்டுக்குள் உள்ள அத்தேசிய இன மக்களை அணிதிரட்டி ஒடுக்கும் இனவாத அரசிற்கும், வல்லரசுகளுக்கும் எதிராக போராடி வருகின்றன. ஆனால் குர்திஷ்தான் தேசிய இனம் நான்கு நாட்டு அரசுகளின் கீழ் வாழ்கிறது. நான்கு நாடுகள் குர்திஷ்தானையும் அதன் மக்களான குர்திஷ் மக்களையும் துண்டாடி தத்தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. இவ்வாறு துண்டாடப்பட்டுள்ள குர்திஷ் மக்களை அய்க்கியப்படுத்தி நான்கு நாட்டு அரசுகளுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராக ஏககாலத்தில் போராடி குர்திஷ்தானை தனி நாடாக விடுதலை பெறச் செய்வதையே அம் மக்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இதுவே மற்றய தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் இருந்து குர்திஷ்தானுக்கான போராட்டத்தை வேறுபடுத்திக் காட்டும் அம்சமாகும். மேலே உள்ள படத்தில் இதை தெளிவாக பார்க்க முடியும். கீழே உள்ள அட்டவணையும், இதை புலப்படுத்தும்.

| ஆக்கிரமித்த நாடுகள் | ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் | குர்திஷ் மக்களின் எண்ணிக்கை | மொத்த சனத் தொகையில் குர்திஷின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| துருக்கி | மத்திய வடமேற்கு குர்திஷ்தான் | 20 மில்லியன் | 26.4% |
| ஈராக் | தெற்கு குர்திஷ்தான் | 4 மில்லியன் | 21.8% |
| ஈரான் | கிழக்கு குர்திஷ்தான் | 7 மில்லியன் | 12.7% |
| சிரியா | தென்மேற்கு குர்திஷ்தான் | 1.5 மில்லியன் | 12.7% |

அரசியல் - பண்பாட்டு துறைகளிலான தீவிர ஒடுக்குமுறையும் சுரண்டலும் அனைத்து நாட்டு குர்திஷ்தான் மக்களுக்கும் பொதுமைப்பட்டதாக இருந்த போதிலும் அந்தந்த நாட்டுக்குள் ஏற்றத்தாழ்வான தேசிய இன ஒடுக்கு முறை வடிவங்களின் ஊடாக அவற்றை குர்திஷ்தான் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குர்திஷ்தான் மக்கள் மீதான பொருளாதார சுரண்டல் மற்றும் இன ஒடுக்கு முறைக்கு எதிராக பல இயக்கங்கள் போராடி வருகின்றன.

அந்தந்த நாட்டு மக்கள் இயக்கங்கள் தமது நாட்டிலுள்ள சிறுபான்மை குர்து தேசிய இன மக்களின் உரிமைகளுக்காகவும் போராடிக் கொண்டிருப்பது ஒருபுறம். மறுபுறம் துண்டாடப்பட்டுள்ள குர்து இன மக்களை அய்க்கியப்படுத்தி குர்திஷ்தானை தனி நாடாக உருவாக்கும் குர்திஷ்தான் தேசிய விடுதலை போராட்டமும் அதனை முன்னெடுக்கும் குர்திஷ்தான் இன விடுதலை இயக்கங்களும் இன்னோர் புதிய பரிமாணம் பெற்றுள்ளது. குர்திஷ்தான் தனிநாட்டுக்கான போராட்டம் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதாக உள்ளது.

குர்திஷ்தான் மக்களின் அடக்குமுறையாளர்களான நான்கு நாட்டு அரசுகளுக்கும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களிற்கும் எதிராக பகிரங்க அறிவிப்புடன் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி (P.K.K.) யின் தலைமையின் கீழ் 1984 ஆவணி 15ல் உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை ராணுவம் (ARGK), தேசபக்த பெண்கள் அமைப்பு (YJWK), ERNK ஆகியனவும் போராடி வருகின்றன. நான்கு நாட்டு அரசுகள் தான் தமக்கு எதிரி, அந்நாட்டு மக்கள் நண்பர்கள் என்றும் உலக நாடுகளில் தேசிய இன ஒடுக்குமுறை, சமூக பொருளாதார சுரண்டல், ஏகாதிபத்தியங்கள் இவற்றுக்கு எதிராக போராடுகின்ற மக்கள் இயக்கங்கள் தமது நண்பர்கள் என்றும் P.K.K. இன் தலைவரான அபோ அப்துல்லா ஒகலான் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் ஆக்கிரமிப்பு தெற்கு குர்திஷ்தானில் இருந்த ARGKன் இரு ராணுவ முகாம்கள் மீது 20000 பேர் கொண்ட

துருக்கிய அரசபடை கவச வண்டிகள், பீரங்கிகள் சகிதம் 88 - லும், 91 - லும் நடத்திய ஒடுக்குமுறை யுத்தம் குறிப்பிடத்தக்கது. 1991 - இல் ஈராக குவைத் மீது நடத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்ததுடன், அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகளுக்கும், இராக்கிற்கும் இடையில் நடந்த வளைகுடா யுத்தத்திலும் PKKயும் ERNK யும் எந்நாட்டிற்கும் ஆதரவு அளிக்கவில்லை என்று 1991 யூனில் நடந்த சர்வதேச அளவிலான ''அணு ஆயுத எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்பு கூட்டமைப்பு'' மாநாட்டில் அறிவித்தது கவனிக்கத்தக்கது.

இரு மாதங்களுக்கு முன் கிழக்கு குர்திஷ்தானில் குர்திஷ்தான் சனநாயக கட்சி (KDP)க்கும், குர்திஷ்தான் தேச பக்த ஒன்றியத்திற்கும் (PUK) இடையில் நடந்த சகோதர யுத்தம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. 'மசூட் பர்ஷானி' என்பவர் தலைமையிலான KDP இயக்கம் தெற்கு குர்திஷ்தானில் தான் பிரதானமாக நிலை கொண்டுள்ளது. ஈராக்கிய சார்பு நிலைப்பாட்டுடன் இயங்கி வருகிறது. அதே போல் கிழக்கு குர்திஷ்தானில் நிலை கொண்டுள்ள PUK 20 வருடங்களுக்கு முன் KDP யில் இருந்து பிளவுபட்டு வந்த இயக்கமே. இது ஈரானிய சார்பு நிலைப்பாட்டை கொண்டதாக உள்ளது. இதன் தலைவராக 'ஜலால் தலபானி' உள்ளார். KDP யும் PUK யும் துருக்கிய இனவாத ஒடுக்குமுறை அரசுடன் சுமுகமான உறவைப் பேணி வருகின்றனர்.


PUK இன் கட்டுப்பாட்டில் இருந்த தெற்கு குர்திஷ்தான் தலைநகரான இர்பிலை கைப்பற்றும் நோக்குடன் KDP இயக்கம் ஈராக்கின் 30000 ராணுவம், 450 கவச வண்டிகள், பீரங்கிகள் துணையுடன் யுத்தத்தில் ஈடுபட்டது. இர்பிலை தொடர்ந்து இரண்டாவது நகரமான சுலைமானியாவையும் PUK யிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டது. இருந்தும் ஈரான் ஆதரவுடன் PUK யும் பதிலடி யுத்தத்தில் இறங்கியது. இர்பில், சுலைமானியா பகுதிகளுக்குள் இராக் ராணுவம் ஐ.நா. தடையை மீறி புகுந்ததன் விளைவாக வளைகுடா நெருக்கடி மீண்டும் ஏற்பட்டது. அமெரிக்கா ஈராக் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியது. ஈராக்கின் வடக்கு, தெற்கில், ஈராக்கிய விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்ட வடக்கு, தெற்கு பகுதியின் அளவை இப்போது அமெரிக்கா மேலும் அதிகரித்துக் கொண்டது. இந்த வடக்குப் பகுதியில்தான் ஈராக்கிய ஆதரவு KDP க்கும், ஈரானிய ஆதரவு PUK க்கும் இடையில் ''சகோதர யுத்தம்'' நடந்தது.

ஈராக்கை அச்சுறுத்தும் நோக்கத்துடன் அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல்களையும், படைக் குவிப்பையும் 22 நாடுகளின் கூட்டமைப்பான ''அரபு லீக்கும்'', ''GEC''யும் மற்றும் உலக நாடுகளில் பலவும் கண்டித்தன. அதே நேரம் ஈராக்கும் தனது இராணுவத்தை இர்பில் பகுதியில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டது. அப்பகுதிகளை KDP யின் கட்டுப்பாட்டில் விட்டுவிட்டது. குர்து தேசிய இன விடுதலைக்கான அம் மக்களின் போராட்டங்களையும், போராளிகளையும் கடுமையான ஒடுக்குமுறையின் மூலம் தெற்கு குர்திஷ்தானில் ஈராக் நசுக்கி வருகிறது. அதேபோல் அமெரிக்க வல்லரசும் துருக்கி அரசும் குர்திஷ்தான் மக்கள் மேலான அடக்குமுறைகளை ஊக்குவித்து வருகின்றது. இந்நிலையில் அமெரிக்காவும், ஈராக்கும் குர்து மக்களின் நலன்களை முன்னிட்டே படை நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறுவது எவ்வளவு பெரிய மோசடி.

பனிப்போர் காலகட்டத்தில் அமெரிக்க - ரஷ்ய மேல்நிலை வல்லரசுகளின் உடந்தையுடன் எட்டு ஆண்டுகளாக நடந்த ஈரான் - ஈராக் யுத்தமும், இன்றைய புதிய உலக ஒழுங்கமைவுகளின் கீழ் அமெரிக்க உலக ஆதிக்க வெறிக்கும், ஈராக்கின் பிராந்திய விரிவாதிக்க தலையெடுப்பிற்கும் இடையில் நடக்கும் அரசியல் - இராணுவ ரீதியிலான தீவிர மோதலும் வளைகுடா நாடுகளில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகிறது.

குர்திஸ்தான் மக்களின் தேசிய விடுதலைக்காக போராடுவதாக PUK யும், KDP யும் கூறிக் கொண்டாலும் அம்மக்களை அடக்குமுறை செய்கின்ற உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளை பற்றி தவறான பார்வையையே கொண்டுள்ளனர். அரசியல் முரண்பாடுகளை ஆயுதமுனையில் தீர்த்துக் கொள்கின்ற இவ் இரு இயக்கங்களும் தனி இயக்க சர்வாதிகாரத்தை முன்நிறுத்துவதன் மூலம் போராடும் இயக்கங்களுக்கிடையிலான அய்க்கியத்தை நிராகரிக்கின்றன. எதிரிக்கும் மக்களுக்கும் இடையிலான முதன்மையான முரண்பாட்டை பிரதானப்படுத்தாமல், இயக்கங்களுக்கு இடையிலான அதாவது அக முரண்பாட்டை முதன்மைப் படுத்தியதன் விளைவால் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ள எதிரியுடன் கூட கூட்டுச் சேரும் கேடுகெட்ட நிலைக்கு வந்துள்ளனர். இவர்களின் முதலாளிய - குட்டி முதலாளித்துவ கொள்கை தான் ஈரானுக்கும், ஈராக்கிற்கும் தம்மை அடகு வைக்கவும், துருக்கியுடன் பேரம் பேசவும், அவர்களைத் தூண்டியுள்ளது. இதன் காரணமாக குர்திஷ்தான் மக்களின் விடுதலை சக்திகளாக தோன்றிய இவ் இரு இயக்கமும் இன்று அம் மக்களின் சொல்லொணா துன்ப துயரங்களுக்கு காரணமாகிப் போயுள்ளது. இவர்களின் இத்தகைய போக்குகளால் குர்கிஷ்தான் மக்களின் போராட்டம் தவிர்க்க முடியாமல் பலவீனமடைகிறது.

குர்திஷ்தான் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் நடக்கும் சகோதர யுத்தம் இப்படி இருக்கையில் மத்திய ஆசியாவைப் பார்த்தால்....



www.tamilarangam.net



1979 - ல் ஆப்கானிஸ்தான் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பையும், பப்ரக் கார்மல், நஜிபுல்லா தலைமையிலான பொம்மை அரசையும் எதிர்த்து நடந்த ஆப்கான் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் வரலாறில் முக்கியமானது. போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்களில் குர்திஸ்தானின் PUK, KDP யை போன்ற முதலாளித்துவ - குட்டி முதலாளித்துவ கண்ணோட்டம் கொண்ட இயக்கங்களும் இருந்தன. அதே வேளை மத அடிப்படைவாதம் கொண்ட இயக்கங்களும் இருந்தன.

ரஷ்யாவிற்கு எதிராக பனிப்போர் நடத்தி வந்த அமெரிக்க வல்லரசின் தாராள ஆதரவை பெற்ற இவ்வியக்கங்கள் அண்டை நாடுகளான பாகிஸ்தான், ஈரான் அரசுகளின் சார்பு இயக்கங்களாக, 'சகோதர யுத்தம்' நடத்துபவையாக மாற்றம் கண்டன. ரஷ்ய ராணுவத்திற்கும், நஜிபுல்லா அரசிற்கும் எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்ததன் விளைவால் 1989 - ல் ஆப்கானை விட்டு ரசிய ஆக்கிரமிப்பு ராணுவம் வெளியேறியது. 1992 - ல் நஜிபுல்லா தூக்கி எறியப்பட்டு ரப்பானி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. 1996 - இல் ஆப்கானிஸ்தானின் 2/3 பகுதியை கைப்பற்றிய மத அடிப்படைவாத இயக்கமான 'தலிபான்' 'ரப்பானி' தலைமையிலான அரசாங்கத்தை விரட்டிவிட்டு ஆட்சியை கைப்பற்றிக் கொண்டது. ஆப்கானிஸ்தானை பேரழிவிற்கு உள்ளாக்கிவிட்ட 18 ஆண்டுகால யுத்தம் இன்றுவரை தொடர்கிறது.

ரஷ்ய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் நடந்த "சகோதர சண்டையும், யுத்தமும்தான்", இன்று அண்டைநாட்டு அரசுகளின், வல்லரசுகளின் பகுதிவாரியான யுத்தமாக, இவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் உள்நாட்டு ஆளும் கும்பல்களுக்கு இடையிலான யுத்தமாக இருக்கிறது. மேலும் இது மத - இன அடிப்படைவாத சக்திகளின் உள்நாட்டு யுத்தமாகவும் ஆப்கானிஸ்தானையும், அதன் மக்களையும் உருக்குலைத்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா, சவூதி அரேபியா, பாகிஸ்தானின் ஆதரவை தலிபான் இயக்கம் பெற்றிருப்பதும், ஆட்சி கவிழ்க்கப்பட்ட ரப்பானி, ஹெக்மதியார் கூட்டணியை ஈரான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகள் ஆதரித்து வருவதும், ஜெனரல் தோஸ்தம் தலைமையிலான இயக்கம், ரஷ்யா, கஜகஸ்தான் நாடுகளின் ஆதரவை பெற்றிருப்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். 1996 நவம்பரில் அமெரிக்கா உட்பட 19 நாடுகள் ஆப்கான் பிரச்சனை பற்றி விவாதிக்க ஈரான் தலைநகரில் கூடி வெளியிட்ட அறிக்கையில் ஆப்கான் போருக்கு பின்னனியில் மேற்கூறிய நாடுகள் இருப்பதை ஒப்புக் கொண்டு ஆப்கான் அமைதிக்கு அழைப்பு விட்டுள்ளனர். இந்த யுத்தவெறியர்களின் யுத்தத்தால், இவர்களின் யுத்தம் - சமாதானம் - அமைதி பற்றி கொள்கைகளால், 60 லட்சம் மக்கள் உள்நாட்டிலும், மற்றும் ஈரானிலும், பாகிஸ்தானிலும் அகதிகளாக உள்ளனர்.

தெற்காசியாவை நோக்கினால், தமிழீழ தேசிய இன விடுதலை போராட்டத்தில் அன்னிய சார்பு, வல்லரசிய சார்பு இயக்கங்களைப் பார்க்க முடியும். தமிழீழ போராட்டமும் சகோதர யுத்த வரலாற்றை கொண்டிருக்கிறது. குர்திஷ்தானிலும், ஆப்கானிலும் ஒரு இயக்கத்தின் கட்டுப்பாட்டு பகுதியை மற்றைய இயக்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான சகோதர யுத்தங்கள் நடத்தப்படுவதை காண்கிறோம். ஆனால் தமிழீழத்தில் இயக்கங்கள் தமக்கென்று கட்டுப்பாட்டு பிரதேசங்களை உருவாக்கிக் கொள்வதற்கு முன்பாகவே இயக்க மோதலும், சண்டைகளும் தொடங்கி விட்டன. இந்த வளர்ச்சிப் போக்கில் 1985 - இல் டெலோவிற்கும், புலிகளுக்கும் இடையில் நடந்த 'சகோதர யுத்தம்' குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முன்பாகவே பிற இயக்கங்களை புலிகள் அழித்தும், தடைசெய்தும் வந்தனர். அடுத்து இந்திய ராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தின் போது நடந்த சகோதர யுத்தமும் வித்தியாசமானதாக இருந்தது. PLOT, ENDLF, EPRLF, EPDP போன்ற துரோக இயக்கங்கள் இந்திய அரசின் ஆக்கிரமிப்பிற்கு உடந்தையாகவும், கூட்டாளிகளாகவும் செயற்பட்டன. இந்திய ராணுவ வெளியேற்றத்திற்கு பின் ENDLF தவிர்ந்த துரோகக் குழுக்கள் சிறிலங்கா இனவெறி அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டன.

புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த தீவுப் பகுதியைக் கைப்பற்ற சிறீலங்கா ராணுவம் மேற்கொண்ட தாக்குதலில்EPDP இயக்கமும் கலந்து கொண்டது. தீவுப் பகுதியை கைப்பற்றி அதன் சிவில் நிர்வாகத்தை EPDP யிடம் கொடுத்த சிறீலங்கா ராணுவம் "தான் ஆளுவதற்கு அல்ல, தமிழர்கள் ஆள்வதற்குத்தான்" புலிகளை அழித்து வருவதாக பொய்ப் பிரச்சாரம் செய்தது.

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போரிலும், அதன் பின்பான சிறீலங்கா ராணுவத்துடன் நடந்து வரும் போரிலும் எதிரிகளின் பக்கம் நின்ற தமிழ் இராணுவத் தலைமைகளை சகோதர யுத்தத்தின் மூலம் உள்நாட்டு யுத்த முனைகளில் புலிகள் அழித்ததை தவறானதாக நாம் பார்க்கவில்லை. ஆனால் புலிகளும், துரோகக் குழுக்களும் இக் காலப் பகுதிகளில் மக்கள் மேல் செய்த கொடுமைகள் கண்டிக்கப்பட வேண்டியவை.

தேசிய இன விடுதலைப் போராட்டத்தில், பிரதான எதிரிகளுடன் கூட்டுச் சேர்ந்து நின்று யுத்தத்தை கட்டவிழ்த்து விடும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் துரோக இராணுவ தலைமைகள், சகோதர சண்டைகளாக, யுத்தங்களாக இருந்தாலும், அழிக்கப்படுவதுதான் ஒடுக்கப்பட்ட இனத்தின், தேசத்தின் சுதந்திரத்திற்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

அதேவேளை அந்த யுத்தம் போராடும் மக்களின் நலனுக்காக நடத்தப்படுகிறதா? அல்லது அண்டை நாடுகளின், வல்லரசுகளின் நலனுக்காக நடத்தப்படுகிறதா? என்றும் சொந்த மக்களின் பலத்தில் தங்கி நின்றா? அல்லது வல்லரசிய, பிராந்திய விரிவாதிக்க அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளின் ஏதாவது ஒன்றின் பலத்தில் தங்கி நின்றா? என்பது தெளிவாக ஆராயப்பட வேண்டும். சொந்த மக்களின் பலத்தில், நலனில் தங்கி நின்று தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தை நடத்துவதே சரியான வழியாக இருக்கும்.

இந்திய ஆக்கிரமிப்புக்கு முந்தைய காலப் பகுதியில் PLOT, EPRLF, ENDLF, TELO, TENA, TEA இயக்கங்கள்மீது புலிகள் நடத்திய சகோதர யுத்தத்தை எக்காரணம் கொண்டும் ஆதரிக்க முடியாது. ஏனெனில் இது புலிகள் இயக்கத்தின் தனி இயக்க சர்வாதிகாரத்தின் விளைவாக இருந்தது. புலிகளின்

அழித்தொழிப்பின் காரணமாகவே இந்திய, சிறீலங்கா அரசுகளுடன் தாங்கள் கூட்டு சேர்ந்ததாக கூறும் துரோகக் குழுக்களின் வாதமும் ஏற்புடையதல்ல. அதேவேளை இந்திய, சிறீலங்கா அரசுகளிடம் இத்துரோக தலைமைகள் சரணடைவார்கள் என்று முன்கூட்டியே புலிகள் தீர்க்கதரிசனமாக தெரிந்து கொண்டதால்தான் அவர்களை ஆரம்பத்திலேயே அழிக்க முடிவு செய்தார்கள் என்ற புலிகளது, புலிகளின் கண்மூடித்தனமான ஆதரவாளர்களின் சாஸ்திரவாதமும் நிராகரிக்கப்பட வேண்டியதே.

வல்லரசுகளையும் இந்திய, சிறீலங்கா அரசுகளை எதிர்த்து தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்காக போராடி வரும் தேசபக்த புரட்சிகர இயக்கங்களையும், புரட்சியாளர்களையும் இந்தக் கணம்வரை ஏன் புலிகள் தடை செய்துள்ளார்கள், சிறைப்பிடித்து அழித்து வருகிறார்கள். இங்கேதான் புலிகளின், புலி ஆதரவாளர்களின் அரசியல் பின்புலம் என்ன என்பது தெளிவாகத் தெரிய வருகிறது - வரும்.

ஒரு நாட்டின் தேசிய இனப் பிரச்சனையில், விடுதலைப் போராட்டத்தில் வல்லரசுகளும், பிராந்திய விரிவாதிக்க அரசுகளும், அண்டை நாடுகளும் தலையீட்டை செய்யும். "ஒரு நாடு இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதில்லை" என்று அய். நா. சாசனத்தில் எழுதி வைத்துக் கொண்டு, தமது நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் இந்நாடுகள் தத்தமது பொருளாதார - அரசியல் - இராணுவ நலன்களை முன்னிறுத்தி இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையீடு செய்கின்ற வெளியுறவுக் கொள்கையை கடைப்படித்து வருகின்றன. இன ஒடுக்கு முறைக்கு எதிராக ஒரு நாட்டில் உருவாகின்ற இயக்கங்கள் மத்தியில் தமது நலனிற்கு உகந்து செயற்படக்கூடிய இயக்கங்களை தெரிவு செய்து (உள் நாட்டு அரசிற்கு எதிராக செயல்பட உதவி அளித்துக் கொண்டே தனக்கு சாதகமாக இயக்கத்தை தேர்ந்தெடுக்கின்றன. உதாரணமாக இந்திய அரசு தமிழீழத்தின் 5 பெரிய இயக்கங்களுக்கும் உதவி வழங்கிய போதிலும் சிலதை மட்டுமே மிகவும் நம்பகமானதாக தெரிவு செய்தன. வல்லரசுகளும் இவ்வாறுதான் செய்கின்றன.) அவற்றின் மூலமாக அந்நாட்டில் அப் பிராந்திய - உலக வல்லரசுகளும், அண்டை நாடுகளும் தமது நலன்களை பேணி வருகின்றன. தமக்கு சார்பான இயக்கங்களை கண்டுபிடிப்பதுடன் மட்டும் இவ் அரசுகள் நின்று விடுவதில்லை. ஒரு விடுதலை இயக்கம் உள் முரண்பாட்டால் பிளவுபடும்போதும் தமக்கு சார்பான இயக்கத்தை அதில் உருவாக்கிக் கொள்கிறது. PLOT யில் இருந்து ENDLF ஐ EPRLF - இலிருந்து EPDP-ஐ உருவாக்கியதும் இதற்கு உதாரணமாக உள்ளது. இதன்மூலம் தமது பிராந்திய - உலக ஆதிக்க போட்டிகளில், பொருளாதார போட்டிகளில் மறைமுகமாக மோதிக் கொள்கின்றன. அதே வேளை இதில் தமது ஆயுத வியாபாரத்தையும் நடத்துகின்றன. விடுதலைப் போராட்டங்களை அதனை சரியான திசைவழியில் இருந்து வழுவச் செய்து தங்களின் ஆதிக்க நலன்களுக்கான யுத்தத்தில் தேசத்தை நாசம் செய்கின்றன. மக்களை போராட்டத்தின் மேல் வெறுப்படையச் செய்கின்ற 'சகோதர யுத்தம்' இறுதியில் உலக எதிரிகளுக்கே உதவுகின்றது. முடிவில் தமக்கிடையிலான போட்டியில் ஒரு உடன்பாட்டிற்கு வரும்போது அவற்றை அமைதிக்கான - சமாதனத்திற்கான ஒப்பந்தங்களாக ஒடுக்கப்பட்ட மக்களின் - தேசிய இனத்தின் மேல் திணிக்கின்றன. தேசிய போராட்ட அரங்கில் உள்ள இயக்கங்களின் முதலாளிய - குட்டி முதலாளித்துவ சிந்தனை, குறுக்கு வழி விடுதலைக் கொள்கை, உடனடி வெற்றியில் நாட்டம் போன்றவையே இவ் இயக்கங்களை அந்நிய சக்திகளின் கருவிகளாக மாற்றுகின்றன.

ஒரு நாட்டில் நடக்கும் தேசிய இன ஒடுக்கு முறையை எதிர்ப்பது, ஒடுக்கு முறைக்கு எதிரான அத்தேசிய இன மக்களின் போராட்டங்களை ஆதரிப்பது என்பது முன்நிபந்தனை அற்ற சர்வதேச கொள்கை ஆகும். ஆனால் அத் தேசிய இன போராட்டத்தில் உள்ள குறிப்பிட்ட ஒரு இயக்கத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறிப்பிட்ட சில அடிப்படைக் கொள்கையில் இருந்து தீர்மானிக்கப்பட வேண்டும்.

முதலாவது, உள்நாட்டில் தேசிய இன ஒடுக்குமுறை அரசிற்கு எதிராக போராடுகின்றதா? இல்லையா? என்பது.( இரத்தம் சிந்துகிறாதா இல்லையா என்பது அவ் இயக்கத்தின் வளர்ச்சியைப் பொறுத்தது.)

இரண்டாவதாக, தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் அண்டை நாடுகளின், பிராந்திய விரிவாதிக்க நாடுகளின் தலையீட்டை வெளிப்படையாகவே எதிர்க்கிறதா? இல்லையா? என்பது.

மூன்றாவது தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கும் அரசுடன் கூடவே நிற்கும் உலக வல்லரசுகளை எதிர்க்கும் நிலைப்பாட்டை, போராட்டங்களை வெளிப்படையாகவே முன்வைக்கிறதா? இல்லையா? என்பது.

நான்காவதாக அண்டை நாடுகளிலும், பிராந்திய விரிவாதிக்க - வல்லரசு நாடுகளிலும் நடக்கும் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான மக்கள் போராட்டங்களை ஆதரிக்கிறதா? அல்லது மௌனம் சாதிக்கிறதா? என்பது.

இந்த கண்ணோட்டங்களில் இருந்துதான் குறித்த தேசிய இனத்தின் சுதந்திரத்தை - மக்களின் விடுதலையை இந்த நவ - காலனிய சமூக கட்டமைப்பில் ஒரு தேசிய இன விடுதலை இயக்கம் எப்படி சாதிக்கும் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு கேள்விக்கான பதிலில் அவ் இயக்கம் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறதோ அந்த நிலைப்பாட்டை கொண்டுதான் அவ் இயக்கத்தை எந்த எல்லைக்குள் ஆதரிப்பது, விமர்சிப்பது, கூட்டிணைவது என்பதும் மற்றும் எந்தவிதமான எதிர் ராணுவ நடவடிக்கையில் (counter military action) ஈடுபடுவது என்பதையும் தீர்மாணிக்க முடியும்.

நவகாலனிய நாடுகளில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் - யுத்தங்களில் எத்தகைய இயக்கங்களை - கட்சிகளை ஆதரிக்க வேண்டுமெனில் -

தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுகின்ற இயக்கம், அந்நாட்டில் ஒடுக்குகின்ற அரசை முற்றுமுழுவதுமாக தூக்கி எறிவதுதான் ஒரே வழி என்றும் தேசத்தின் விடுதலை என்பது எதிரியிடம் இருந்து மண்ணை விடுவிப்பது மட்டுமல்ல ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பெரும்பான்மை உழைக்கும் மக்களின் சனநாயக உரிமைகளை வென்றெடுப்பதைக் கடமையாகக் கொண்டிருக்கவேண்டும்.

தேசியம் - சனநாயகம் இரண்டையும் சமகாலத்தில் முன்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைத்து போராடுகின்றதும், வல்லரசியம், பிராந்திய விரிவாதிக்கம், அண்டை நாடுகள் ஆகியவற்றின் தலையீட்டை வெளிப்படையாக எதிர்க்கின்ற, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் - அரசியல் பொருளாதார விடுதலைக்காக போராடும் மக்களின் போராட்டங்களை ஆதரிக்கும் நிலைப்பாட்டை கொண்ட இயக்கமாக இருக்க வேண்டும். இவ் இயக்கங்களையே புரட்சிகர தேசிய இனவிடுதலை இயக்கமாக கருதி அவற்றை ஆதரிப்பதே புரட்சிகர சனநாயகவாதியின் சர்வதேச கடமையாக இருக்க வேண்டும். இருக்கவும் முடியும்.

''தனது தேசிய இனத்தின் மேலான ஒடுக்குமுறையை எதிர்க்காத ஒருவன், அவ் ஒடுக்குமுறைக்கு எதிரான அம்மக்களின் போராட்டத்தை ஆதரிக்காத ஒருவன் இன்னோர் நாட்டு தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை, இயக்கத்தை ஆதரிப்பானாயின் அவன் அத்தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் ரசிகனாக மட்டுமே இருப்பான்.''

தமிழரசன்

## மாணவர் போராட்டங்கள் மக்கள் போராட்டங்களாக மாறட்டும்

மியான்மர் ராணுவ எதேச்சதிகாரத்திற்கு எதிரான அந்நாட்டு மக்களின் சனநாயக போராட்டங்களும், சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களும், ஒடுக்குமுறைகளையும் மீறி தீவிரமடைந்து வருகின்றன. இந்நிலையில் யாங்கோன் பல்கலை மாணவர்களின் சனநாயக உரிமைகளுக்கான எழுச்சி எதேச்சதிகார அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன், இதே போன்று வெடித்த பல்கலை மாணவர்களின் போராட்டத்தை பல நூறு மாணவர்களை படுகொலை செய்ததன் மூலம் கடுமையாக ஒடுக்கியது. இருந்தும் மாணவர்கள் மேலான உரிமை மீறல்கள் மற்றும் கல்விப்பிரச்சனைகள் அவர்களை மறுபடியும் போராட்ட களத்தில் குதிக்க வைத்துள்ளது.

மனித உரிமை நிலை நாட்டப்பட வேண்டும், மாணவர் சங்கம் அமைக்கும் உரிமை, சனநாயகத்திற்காக குரல் கொடுத்த மாணவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி 96 டிசம்பர் முற்பகுதியில் இருந்து தமது கிளர்ச்சி நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். போராட்டம் மியான்மரின் மற்றய பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பரவியிருக்கிறது. போராடும் மாணவர்கள் தம்மை ''புதிய தலைமுறையினர்'' என அடையாளப்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது. ராணுவ ஏதேச்சதிகார அரசு போராட்டத்தை ஒடுக்கும் நோக்குடன் போராடும் மாணவர்களை கைது செய்தும், யாங்கோன் நகரை முற்றுகையிட்டும் அவர்களை அச்சுறுத்தி வருகிறது. போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த சனநாயக தேசிய கட்சியின் தலைவர் ஆங்சான் சூ கியியை தடுத்து வைத்துள்ளது.

உள்நாட்டு சமூக - பொருளாதார - அரசியல் நெருக்கடி, இனஒடுக்குமுறை, சனநாயக மறுப்பு போன்ற காரணங்களினால் மாணவர்களின் கல்விவாய்ப்பு மறுக்கப்படுகிறது. ஏகாதிபத்தியத்திற்கும், ஆளும் வர்க்கங்களுக்கும் சார்பான கல்விக் கொள்கைகள் மாணவர்களின் படைப்பாற்றலை அழித்து வருவதுடன் அவர்களை அதிகார வர்கத்தின் சேவர்களாக மாற்ற முற்படுகின்றது. இந் நெருக்கடிகளை தகர்த்து அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் முயற்சியின் விளைவே மாணவர் போராட்டங்களின் அடித்தளமாக இருப்பது.

''அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை தருவது'' என்பது செல்லரித்துப் போன முதலாளித்துவ சுரண்டல் கட்டமைப்பால் நிறைவேற்ற முடியாதது. இதை மறைக்க முயலும் ஆளும் வர்க்கம் குறிப்பிட்ட பிரிவினருக்கு கல்வி வாய்ப்பை கொடுப்பதற்காக சாதி, மத, இன அடிப்படையில் இன்னொரு பிரிவினரின் கல்விவாய்ப்பை பறித்து விடுகிறது. இந்திய அரசின் ஒருதலைபட்சமான கல்விக் கொள்கையும் அதை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கொண்டு வரப்பட்ட 'மண்டல் கமிஷன்' பரிந்துரையும் இதற்கு உதாரணமாக கொள்ளலாம். அடுத்தது இன அடக்குமுறையின் தொடர்ச்சியான விரயமாக குறித்த இனத்து மாணவர்களின் கல்விவாய்ப்பை பறித்துக் கொள்வது. இதற்கு உதாரணமாக சிறீலங்கா அரசு கொண்டு வந்த தமிழ் மாணவர் மேலான தரப்படுத்தல் கொள்கையை கொள்ள முடியும். இவ் இருவழிப்பட்ட ஒடுக்குமுறை ஏகாதிபத்திய - ஆளும் வர்க்க நலன் சார்ந்து தான் செய்யப்படுகின்றது. ஏகாதிபத்திய பொருளாதார நலனுக்கும் ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யும் வகையில் மாணவர்களை பயிற்றுவிக்கும் நோக்கத்தின் விரிவடைந்த வடிவமாகும். இது மாணவர்களின் படைப்பு ஆற்றலை அழிப்பதுடன் அவர்களின் விடுதலை உணர்வையும், தணித்துவமான அடையாளத்தையும் கூட சிதைத்து விடுகிறது.

ஒரு புறத்தில் சாதிய, மத, இன அடிப்படையில் கல்வி வாய்ப்பு பறிக்கப்படுகின்ற நேரத்தில் மறுபுறத்தில் கிடைக்கும் கல்வி வாய்ப்பும் மாணவர்களை சிதைத்து விடுவதாக உள்ளது.

உள்நாட்டு பிரச்சனை கொழுந்து விட்டெரியும் நாடுகளில் சகஜ வாழ்க்கை பாதிக்கப்படுவதும், மக்கள் அகதிகளாக இடப்பெயர்ச்சி அடைவதும், தொடர்ச்சியான ஆயுத மோதல்களாலும் மாணவர்கள் கல்வியை தொடர முடியாதல் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இத்தகைய மாணவர்களின் இருப்பு நாளுக்கு நாள் உலகில் அதிகரித்துக் செல்கிறது. இன ஒடுக்கு முறைக் களங்கள், சனநாயக போராட்டக் களங்கள் இரண்டிலும் இந் நிகழ்வுகளை காணக் கூடியதாக உள்ளது.

இருக்கும் கல்வித் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதற்குள்

www.tamilarangam.net



சிறு மாற்றங்களை கோரும் மாணவர்களின் போராட்டங்கள் ஒரு புறம் இருக்கையில், கல்வித் திட்டத்திற்கு எதிராக பெரிய அளவிலான மாற்றங்களை கோரியும், நாட்டின் தேசத்தின் மீதான ஒடுக்குமுறைகளை எதிர்த்தும் நடக்கும் மாணவர் போராட்டங்கள் மறுபுறம். பின்சொன்ன வகைப் போராட்டங்களே ஒடுக்கும் அரசுகளை அச்சுறுத்த செய்வதுடன் விடுதலைப் போராட்டங்களிலும் தீர்மானமான பங்கையும் செலுத்துகின்றன.

தரப்படுத்தல் கல்வி முறைக்கும், இன ஒடுக்கு முறைக்கும் எதிரான தமிழீழ பல்கலை மாணவர்களின் பேரினவாத எதிர்ப்புப் போராட்டம், கொழும்பு பல்கலை மாணவர்களின் சனநாயக ஆதரவுப் போராட்டமும், பர்மிய மாணவர்களின் போராட்டமும், தமிழ்நாட்டில் இந்தி திணிப்பை எதிர்த்த மாணவர்களின் தீவிர போராட்டங்கள் பின்சொன்ன வகைப்பட்டதே. அதேவேளை 1966-இல் சீனாவில் மாணவர்கள் மேற்கொண்ட போராட்டமானது இதிலிருந்து வேறுபட்டு சமுதாய மாற்றத்தோடு தொடர்புபட்டதாய் இருந்தது.

இந்தியாவில் 'மண்டல் குழு' பரிந்துரையை எதிர்த்து நடந்த நாடு தழுவிய மாணவர் போராட்டங்கள், சீனாவில் 1989-இல் நடந்த சனநாயக உரிமைக்கான மாணவர் போராட்டம் போன்றவை தவறான தலைமை காரணமாக அதன் முற்போக்கு உள்ளடக்கத்தில் இருந்து வழுவியதாக இருந்தது. ஆனால் இப் போராட்டங்களில் பொது அம்சமாய் இருப்பது இவை அனைத்தும் அந்தந்த நாடுகளின் பிரதான அரசியல் நிகழ்வோடு தொடர்புபட்டும், தீர்மானமான பங்கை வழங்கியும் இருந்தது என்பதுவே. சிறீலங்காவில் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளை தனியார் மயமாக்க SLFP, UNP அரசுகள் அடுத்த முயற்சிகள் எல்லாம் மாணவர்களின் போராட்டங்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் மாணவர்களின் சமூகப் பாத்திரமும் வலிமை மிக்கது என்பதை இப் போராட்டங்களில் காண முடியும்.

தமிழீழ போராட்டத்தின் தொடக்க காலங்களில் யாழ்பல்கலை மாணவர்களின் இன அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. டி.யூ.எல்.எஃப் தலைமையின் மீது நம்பிக்கை இழந்தபின் ஆயுத போராட்டத்தை முன்வைத்த குட்டி முதலாளிய தலைமையை இம் மாணவர்கள் சுவீகரித்துக் கொண்டனர். அரசியல் போராட்ட வடிவங்களை நிராகரித்த இவ் இயக்கங்களில் சில பல்கலை மாணவர்களின் சனநாயக போராட்டங்களை ஆதரிக்காததுடன் அவற்றை தடுக்கவும் செய்தன. '1983-இல் உண்ணாவிரதமிருந்த யாழ் பல்கலை மாணவர்கள் கடத்தப்பட்டது' இதற்கு எடுத்துக் காட்டாகும். இந்த இயக்கங்களின் குறுகிய அரசியல் பார்வையையும், அராஜகத்தையும் எதிர்த்து ஒரு பிரிவு மாணவர்கள் போராடிய போதிலும் அவை முளையிலேயே அழித்தொழிப்பின் மூலம் கிள்ளி எறியப்பட்டன. கொழும்பு பல்கலை மாணவர்களின் சனநாயக போராட்டங்களும் குட்டி முதலாளிய இயக்க தலைமையையே கொண்டிருந்தது. இயக்கங்களின் அரசியல் பார்வையின் குளறுபடியாலும், இராணுவ கண்ணோட்டத்தினாலும் இவ்விரு பகுதி பல்கலை மாணவர்களின் போராட்டங்கள் விடுதலைப் போராட்டத்தில் தீர்மானமான பங்கு ஆற்றுவது தடுக்கப்பட்டது. விடுதலைப் போராட்டத்தின் பிரதான வழியுடன், மக்கள் போராட்டங்களுடன் மாணவர் போராட்டத்தை இவ் இயக்கங்கள் இணைக்கத் தவறியதே அவர்களின் தோல்விக்கு காரணமாக இருந்தது; இருந்தும் வருகிறது.

இன்றைய சூழலில் மாணவர் போரட்டங்கள் முதலாளிய குட்டி முதலாளிய தலைமையின் காரணமாக சீர்திருத்தவாதத்திற்குள்ளும், இராணுவ வாதத்திற்குள்ளும், மூழ்கி விடுகின்றன. சிறீலங்காவில் J.V.P. நடாத்திய மாணவர் போராட்டங்களும், தமிழீழத்தில் PLOT, TELO, EPRLF, EROS, LTTE -யின் பின் அணி திரட்ட மாணவர்களும் அவர்களின் போராட்டங்களும் இதற்கு நல்ல உதாரணமாகும். அதேவேளை மாணவர்களை பிளவுபடுத்தி எதிர் எதிர் அணியாகவும் நிறுத்திவிடுகின்றது. மண்டல் குழு ஆதரவு - எதிர்ப்பு போராட்டங்களிலும் இதை காணக் கூடியதாகவும் இருந்தது.

ஆளும்வர்க்க ஒடுக்குமுறைகளையும், ஒடுக்கப்பட்ட தேசியத்தின் பிற்போக்கு கூறுகளையும் சமப்படுத்தி காட்டுவதன் மூலம் சரணடைவுவாதத் தலைமைகள் மாணவர்களை போராட்டத்தில் இருந்து அந்நியமாக்கி விடுகின்றனர். 'யாழ் பல்கலைகழக மனித உரிமை அமைப்பின்' செயற்பாடும் இத்தகைய அடிப்படையை கொண்டதாகவே இருக்கிறது.

தன்னார்வக் குழுக்கள், என்.ஜி.ஓ. வரிசையில் 'மனித உரிமை' அமைப்புகளையும் ஏகாதிபத்தியங்கள் உருவாக்கி அதன்மூலம் பிற நாடுகளில் தலையிட்டு வருகின்றன. இவ் அமைப்புகள் அரசின் ஒடுக்குமுறையையும், இயக்க அராஜகத்தையும் வேறுபடுத்தி பார்க்காமல் மனித உரிமை மீறல் என்ற கண்ணோட்டத்தில் அவற்றை சித்தரிப்பதன் மூலம் மாணவர்களின் ஒரு பகுதியை தமது அணிக்கு இழுத்துக் கொள்கிறது. அவர்களை ஏகாதிபத்தியங்களின் சேவகர்களாக்குகின்றது.

மியான்மரில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்காக அமெரிக்காவும், ஐரோப்பிய சமூக நாடுகளும் மௌனம் சாதிக்கிற நேரத்தில் பிரான்ஸ் தனது நாட்டு 'மித்தரன் அறக்கட்டளை போன்ற மனித உரிமை அமைப்புகள்' மூலம் குரல் கொடுத்திருப்பதை மாணவர்களின் சனநாயக போராட்டத்திற்கான ஆதரவுக் குரலாக கருத முடியாது. இது ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான ஆதிக்கப் போட்டியின் விளைவே தவிர வேறல்ல. ஏனெனில் உலக எதிர்ப்பை மீறி அணு ஆயுத சோதனை நடத்தியது, ருவாண்ட மேலான அன்மைய ராணுவத் தலையீட்டு முயற்சிகள் போன்றவை எந்தளவிற்கு பிரான்ஸ் மனித உரிமைகளை மதிக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

இந்த நிலையில் இவ் ஏகாதிபத்தியங்கள் ஊட்டி வளர்க்கும் மனித உரிமை அமைப்புகளுக்கு சமூக அக்கறை எப்படி வர முடியும்? இந்தியா, சீனா போன்ற நாடுகளை அண்மைக்காலங்களில் தனது மனித உரிமை அமைப்புகள் மூலம் அமெரிக்கா மிரட்டி வருவது வெளிப்படையான செய்தி.

மியான்மர் பல்கலை மாணவர்களின் சனநாயக ஆதரவுப்

www.tamilarangam.net



போராட்டம் மியான்மர் மக்களின் போராட்டத்தின் அங்கமாக மாறாது இருக்கும் வரை ராணுவ ஏதேச்சதிகார அரசிற்கு சவால்கள் நிறைந்ததாக வளர முடியாது. போராடும் மாணவர்கள் ஏகாதிபத்திய சதியை புரிந்து கொண்டு தமது போராட்டங்களை தேசபக்த சனநாயக வழியில் முன்வைத்து செல்வதுதான் ஆளும் வர்க்கத்தை நிலைகுலைய செய்வதற்கான வழியாக இருக்கும். அதேவேளை தேசிய விடுதலைப் போராட்டங்களில் புரட்சிகர சனநாயக சக்திகள் விமர்சகர்களாக, பார்வையாளர்களாக இருப்பது பீறிட்டு எழும் மாணவர்கள் போராட்டங்கள் சரியான தலைமையின்றி திசைவிலக முக்கிய காரணமாக இருக்கிறது.

சீனத்தில் 1966களில் மாணவர்கள் வரலாற்றையே கொந்தளிக்கச் செய்தனர் எனில் அவர்களின் சக்தியை நெறிப்படுத்துக் கூடிய அரசியல் பின்புலம் அன்று இருந்ததே காரணம். இன்று தேசிய விடுதலைப் போராட்ட களங்களில் உள்ள பிற்போக்கு கூறுகளை உடைத்துக் கொண்டு வரவேண்டிய கடமை மாணவர்களினதும் புரட்சிகர தேசபக்த சக்திகளினதும் கடமையாகவுள்ளது.

இந்திரன்

# தனிநபர் பயங்கரவாதப் படுகொலைகளைக் கண்டிப்போம்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் அராஜக இயக்கங்கள் எல்லாம் இயக்கத்துள் சனநாயகத்திற்காக குரல் எழுப்பியவர்களையும், மற்றை இயக்கங்களுடனான முரண்பாடுகளையும் சிறைப்பிடித்தல், சித்திரவதை, படுகொலை என்று தனிநபர் பயங்கரவாத வழி மூலமே தீர்வு கண்டு வருகின்றார்கள். எதிரிக்கு காட்டி கொடுப்பது, மாற்றுக் கருத்துப் பத்திரிகைகளைத் தடை செய்வது, நூல் நிலையங்களை எரிப்பது வரை தமது குட்டி முதலாளித்துவ சிந்தனை கொண்ட அராஜக வழிகளையே மேற்கொண்டு வருகின்றார்கள்.

தமிழீழத்தில் புதிய பாதை சுந்தரம் முதல் ஒபறோய் தேவன், சபா ரத்தினம், தாஸ், ஆலாலசுந்தரம், தர்மலிங்கம், யாழ் புத்தக கடை மணியம், ராஜனி திணரகம், அகிலன், செல்வன், அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், செல்வி, டொமினிக் (கேசவன்) விமலேஸ்வரன், சுழிபுரம் படுகொலைகள்; மாத்தையா... எனத் தெரிந்தும், தெரியாமலும் எண்ணற்ற படுகொலைகள் நடந்துள்ளது; நடந்து வருகிறது.

இந்தியாவில் தமிழகத்தில் பயிற்சி முகாம்கள் சித்திரவதை கூடங்களாக மாற்றப்பட்டன. உள் இயக்க முரண்பாட்டிற்காக சிவனேஸ்வரனும், சந்ததியாரும்; துரோகத்திற்கு தண்டனை என்ற பெயரில் பத்மநாபாவும், ரெலா முரளி மாஸ்டரும் படுகொலை செய்யப்பட்டனர். இன்னும் முகம் தெரிந்த-தெரியாத பல ஆண் பெண் போராளிகள் அனைத்து இயக்கங்களாலும் கடலுக்கு இரையாக்கப்பட்டனர். விசுவானந்த தேவனின் பயணம் எதிரிகளுக்குக் காட்டி கொடுக்கப்பட்டு நடுகடலில் படுகொலை செய்யப்பட்டார்.

இது கனடா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் தொடர்கின்றது. கனடாவில் தேடகம் நூல் நிலைய எரிப்பு, பிரான்சில் சபாலிங்கம் படுகொலை, பத்திரிகைகள், சஞ்சிகைகளை தடைசெய்வது ஆசிரியர்களை பயமுறுத்துவது என தொடங்கி தற்போது பிரான்சில் வி.புலிகளின் ஈழ முரசு பத்திரிகை ஆசிரியர் கஜன், நாதன் படுகொலை என இந்தப் பட்டியல் நீண்டு செல்கிறது. அராஜக இயக்கங்களின் இந்த நடவடிக்கைகளை சிறீலங்கா அரசும், வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும் பத்திரிகைகளும் தமிழீழப் போராளிகளையும் மக்களையும் பயங்கரவாதிகளாகவும், ஆயுத மோகம் கொண்ட, ஆயுத கலாச்சாரத்தைப் பரப்புபவர்களாகவும் சித்தரித்து வருகின்றன. நாம் வாழும் நாடுகளின் மக்களிடமிருந்தும் எம்மை அந்நியப்படுத்தி வருகின்றன.

இதை இன்று சிந்திக்கின்ற அனைவருமே கண்டிக்கவும் தடுக்கவும் முயல வேண்டும். கருத்து முரண்பாடுகள் கருத்து ரீதியாகவே தீர்க்கப்பட வேண்டும். போராட்டத்தை காட்டிக் கொடுப்பவர்களை, எதிரிகளுடன் கூட்டு சேர்ந்துள்ள துரோகிகளை முதலில் மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் நிறுத்தப்பட்டு, தகுந்த ஆதாரங்களுடன், மக்கள் முன் தண்டனை வழங்க வேண்டும்.

இந்த வழிமுறைகளைக் கைவிட்டு எதேச்சாதிகாரமாக குழுக்களால் தனிநபர்களால், இரகசிய இடங்களில் நடக்கும் படுகொலைகளை, மிரட்டல்களை, நூல் நிலைய எரிப்புக்களை, தடைகளை யார்? எந்த இயக்கம் செய்தாலும் அதை தேசபக்தன் வன்மையாக கண்டிக்கிறது.

www.tamilarangam.net



# போர்முனைக்குச் செல்ல தயாராகும் தமிழீழப் போராளிகளுக்கு

1983 கறுப்புயூலையில், சிறைக்குள்ளும், வெளியிலும் நடந்த தமிழ் இனப் படுகொலையைத் தொடர்ந்து, சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடுவதன் அவசியத்தை உணர்ந்து நிற்கையில், "தைப் பொங்கலுக்கும், தீபாவளிக்கும் தமிழீழம் கிடைத்துவிடும்" ஆயுதப் பயிற்சிக்கு தயாராகுங்கள், இந்தியாவுக்கும், பாலஸ்தீனத்துக்கும், 'லிபியாவுக்கும் அனுப்புகிறோம், மூன்று மாதத்தில் பயிற்சி முடிந்து நாடு திரும்பலாம், பின்னர் அரசை எதிர்த்து போராடுவது தான் கடமை என இயக்கத் தலைமைகள் அழைத்தன. தங்கள் கல்வியை விவசாயத்தை, தொழிற்சாலையை, ஏன் அய்ரோப்பிய நாடுகளின் வாழ்க்கையகைகூட விட்டு விட்டு இளைஞர்களும் - யுவதிகளும் போர்ப் பயிற்சிக்கு சென்றார்கள். தேசத்தின் சுதந்திரம், மக்களின் விடுதலை என்ற முழக்கங்களும், உணர்வும் அவர்களை ஆகர்தித்தது.

ஆயுதங்களுடன் பயிற்சி பெற்றவர்களும், சவுக்கம் கட்டைகளுடன் மட்டும் பயிற்சி பெற்றவர்களுமாக இருக்கையில், போர்முனையில் யுத்தப் பயிற்சியை செய்வதில் ஒவ்வொரு தலைமைகளும் ஒவ்வொரு இராணுவ பாதையை கடைப்பிடித்தனர். கொரில்லா யுத்தத்தை வளர்க்க முனைந்த தலைமைகள் அரசுபடைக்கு எதிரான போர்முனைகளில் போராளிகளை நிறுத்தினர். 'ஒரே நாளில் ஒரே அடியில் தேசத்தை மீட்பது' என்ற கொள்கை கொண்ட PLOT போன்ற தலைமைகள் போராளிகளை பயிற்சி முகாம்களுக்குள் முடக்கி வைத்திருந்தனர். புலிகளின் தினசரி இராணுவ நடவடிக்கைகள் புலிப் போராளிகளை யுத்தப் பயிற்சியில் முன்னிலைக்குக் கொண்டு வந்தது. புலி இயக்கத்தின் தனி இயக்க சர்வாதிகாரம் மற்ற இயக்கங்களை தடைவிதிக்கவும், அழிக்கவும் தொடங்கியது. எதிரிக்கு எதிரான யுத்தத்தில் பயிற்சி பெற்ற புலிகளுக்கு, ஆயுதங்கள் இன்றி, யுத்தப் பயிற்சி இன்றி இருந்த மற்ற போராளி இயக்கங்களை அழிப்பது இலகுவாக இருந்தது; புலிகள் தங்கள் இயக்கத்துள் எழுந்த உள்அமைப்பு சனநாயக போராட்டங்களை, போராளிகளை யுத்த முனைக்கு அனுப்பி வைப்பதன் மூலம் நசுக்கினர். மற்ற இயக்கத் தலைமைகள் இராணுவப் பயிற்சி முகாம்களில் எழுந்த உள் அமைப்பு சனநாயக போராட்டங்களை போராளிகளை நேரடியான உள் இயக்க படுகொலைகள் மூலம் அடக்கினர். சிறீலங்கா அரசு படைகளுக்கு எதிரான யுத்த முனையில் தியாகிகள் ஆனவர்கள் ஒரு. வகை, இயக்கத் தலைமைகளினால் படுகொலை செய்யப்பட்டவர்களும் - சகோதர



யுத்தத்தில் அழிக்கப்பட்டவர்களும் துரோகிகள் - தியாகிகள் என்ற பெயருடன் வாழ்வை முடித்த போராளிகள் இன்னோர் வகை.

இயக்கத் தலைமைகள் மேல் வெறுப்படைந்து, மீண்டும் தங்கள் கல்வியை, வேலையை, விவசாயத்தை, வெளிநாடுகளை நோக்கி ஆயிரக்கணக்கான போராளிகள் போராட்ட வாழ்வை, யுத்தத்தைவிட்டே பின்வாங்கினார்கள். தேசத்தின் சுதந்திரம், மக்களின் விடுதலை மேல் பற்றுக்கொண்டு தமது உயிரை அர்ப்பணித்து போராடி வந்த போராளிகளை, சிறுமுதலாளித்துவ சந்தர்ப்பவாத இயக்கத் தலைமைகள் காயடித்து போராட்டத்தை விட்டு போராளிகள் ஓட வைத்தார்கள்.

தலைமைகள் மேலான கண்மூடித்தனமான பக்தியாலும், இயக்கத்தைவிட்டு போனால் வாழ வேறு வழி இல்லை என்பதாலும், புலிகளால் கைது செய்யப்படுவோம். உயிர்பறிக்கப் படுவோம் என்ற பயத்தாலும் சில நூறு போராளிகள் இந்த துரோகத் தலைமைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் ஆயுதப் போராட்டத்தை விட்ட துரோகத் தலைமைகள் இந்த சிலநூறு போராளிகளை காட்டித் தான் இயக்கம் நடத்துகிறார்கள். இவ் இயக்கங்களுக்குள் உள்ள போராளிகளும், இயக்கத்தைவிட்டு வெளியேறிய முன்னாள் போராளிகளும் புலிகளின் போர்முனைச் சாகசங்களை பார்த்து தங்களுடன் ஒப்பிட்டு உள்ளூர ஏங்குகின்றனர், மெச்சுகின்றனர்.

சிறீலங்கா படைகளை, இந்தியப் படைகளை எதிர்த்து போர்புரிந்து பல வெற்றிகளையும், சில தோல்விகளையும் கண்ட புலிப் போராளிகள், யுத்தத்தின் வளர்ச்சியில் யாழை 5 ஆண்டுகள் தமது கட்டுப்பாட்டில்

www.tamilarangam.net



வைத்திருந்த புலிகள் இன்று யாழையும், கிளிநொச்சியையும் அரசு படைகளிடம் பறிகொடுத்த நிலையில், 8,800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட வவுனியாக் காட்டை மட்டும் தமது கட்டுப்பாட்டில் வைத்து இயங்கிக் கொண்டிருக்கின்றனர். முல்லைத் தீவு முகாம், மட்டக்கிழப்பு அதிரடிப் படை முகாம் தாக்குதல் வெற்றியும் புலிகள் இதுவரை 8 விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளனர். 87 - 89க்கும் இடையில் IPKF இன் 1300 படையினரை அழித்த புலிகள், 90 - 94 க்கும் இடையில் 2679 சிறீலங்கா இராணுவத்தினரை அழித்தனர். 95 யூலையில் மட்டும் 1454 படையினரை அழித்து 5036 பேரை காயப்படுத்தினர். இன்று இரண்டு பட்டாலியன் இராணுவம் இல்லாமல் ஒரு பெரிய இராணுவ முகாமை அரசால் பாதுகாக்க முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளனர். அரசு கட்டுப்பாட்டு பகுதியில் புலிகள் நடத்தும் சிறியதும் - பெரியதுமான தாக்குதல்களும் என எல்லாம் ஒன்றைத் தெளிவாகக் காட்டுகிறது. புலிகள் தாங்களாக சமரசம் அடையாதவரை புலிகளை பூண்டோடு அழிப்பது முடியாத காரியம். இது அரசுக்கும்; இராணுவத் தலைமைக்கும் தெரியும். 97 - இல் றெவே ஜெய'' இராணுவ நடவடிக்கையை தொடக்கியுள்ளது. ஆனால் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு புலிகளை பலவீனப்படுத்திக் கொண்டே இன வெறியரசின் எலும்பு துண்டு சமரசத் திட்டத்துக்குள் புலிகளையும், போராட்டத்தையும் மூழ்கடிப்பதுதான் சந்திரிகா அரசின் இன்றைய அரசியல் - இராணுவத் திட்டம்.

யாழின், கிளிநொச்சியின் இழப்பும், புலிகளுக்கு சர்வதேச ரீதியில் ஏற்பட்டு வரும் நெருக்கடிகளும், இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் நமக்கு என்ன இலாபம் என்ற மனநிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருப்பதும் புலிகளின் தலைமையை அச்சுறுத்தி வருகிறது. புலிகள் பலவீனப்பட்டுள்ளதை மேற்சொன்ன புலிகளின் வெற்றிகளால் மறைத்து விட முடியாது. முடியவில்லை.

முல்லைத் தீவில் M.G.R. க்கு நினைவு தினம் கொண்டாடியதும் புலிகள் இந்திய அரசிடம் மறைமுகமாக நட்புக் கரம் நீட்டி நிற்பதும், ENDLF இயக்கம் மன்னாரில் செயல்பட மறைமுகமாக அனுமதிக்கத் தொடங்கியுள்ளதும் அதை தெளிவாகக் காட்டுகிறது. சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு தான் மட்டும் முகங்கொடுப்பதை தவிர்த்து இராணுவத்துக்கு எதிராக போராட விரும்பும் ENDLF ஐ செயல்பட விடுவதன் நோக்கம் (ஏன் அரசுக்கு எதிரான எல்லா அமைப்புக்களையும் செயல்படவில்லை) அரசின் புலிகள் மீதான தாக்குதலை தவிர்ப்பதும், இந்நேரத்தில் தங்களை தயார்படுத்தலாம், எதிரிக்கு மேல் பல இயக்க - பல முனைத் தாக்குதலை செய்வதன் மூலம் அரசை பலவீனப்படுத்துவது என்ற இராணுவ ரீதியான தேவையில் - நலனில் இருந்தா? அல்லது இந்திய அரசிடம் நட்பு பெற வேண்டுமானால் இந்திய அரசின் மிக மிக நம்பிக்கையானதும் - அரசை எதிர்க்கும் நிலைப்பாட்டிலும் உள்ள ENDLF ஐ செயல்பட விடுவது நிபந்தனையாக இருப்பதாலா? எதற்காக என்பது முக்கியம்?

தமிழீழ போராட்ட வரலாற்றில் புலிகளின் தலைமை அதனது தனி இயக்க சர்வாதிகார போக்கில் கடந்த காலத்தில் நடத்திய தடைகளை, சகோதர யுத்தங்களை கூர்ந்து கவனித்தால், புலிகள் எந்த நோக்கில் இருந்து ENDLF ஐ புலிகள் அனுமதிக்கிறார்கள் என்பது புரியும். இப்போதுENDLF இயக்கம் "தாங்களும், புலிகளும் மட்டும்தான் சிறீலங்கா அரசுக்கு எதிராக போராடி வருவதாக'' கூறுகிறார்கள். மன்னாரில் யுத்த முனையில் செயல்பட 2000 பேராளிகளை கணக்கு வைத்து அணிதிரட்டல் நடக்கிறது. "புலிகள் இந்திய அரசின் தலையீட்டை ஏற்றால், சனநாயகத்தை அங்கீகரித்தால் கூட்டு சேர்ந்து போராடுவது பற்றி யோசிக்கலாம்'' என்கிறார் ENDLF இன் M.P. ஒருவர். வெளிப்படையாகவோ - இரகசியமாகவோ எப்படியானாலும் ENDLF ஐ செயல்பட அனுமதிப்பது இந்திய அரசின் தலையீடு பற்றிய அணுகுமுறையில் புலிகள் நேசக்கரம் நீட்டி இருப்பதாகவே இருக்கிறது.

இந்திய அரசு மிகவும் நிதானத்துடன் - தந்திரமாக இலங்கையில் மீண்டும் தனது தலையீட்டை இரகசியமாகவும் - வெளிப்படையாகவும் ஊக்கப்படுத்தியுள்ளது. "இந்திய வெளியுறவுக் கொள்கை சவால்களும் வாய்ப்புகளும்'' புது டெல்கியில் நடந்த மாநாடும், குஜ்ராலின் பேச்சுக்களும் இலங்கை வந்து சென்றதும் அதை அய்யம் திரிபற காட்டுகிறது. 1987 - ஐ விட மோசமான நிலைமை தமிழீழத்தில் நிலவுகிறது. இந்திய அரசு உணவும் மருந்தும் போட வேண்டும் என ENDLF கோருகிறது. அன்று கடலில் உணவு எடுத்து வர J.R. அரசு அனுமதி மறுத்த போது அதையும்மீறி விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலம் போட்டது இந்திய அரசு. இன்று யாழ் மக்களுக்கு உதவ 750 மெட்ரிக் தொன் அரிசியை சந்திரிகா அரசுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக 20 மெட்ரிக் தொன் அரிசி 'கூரியர்' கப்பல் மூலம் கொழும்பு வந்துள்ளது (ருவாண்டாவில் அய்.நா. சபை உணவு பொட்டலங்களைப் போட்டுள்ளது) EPDP இன் டக்ளஸ் தேவானந்தா, இந்தியா சென்று வந்தபின்னர், "இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த சிறீலங்கா அரசு தவறியதை எதிர்த்து வழக்கு தொடரப் போவதாக'' அதற்கு இந்திய அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளதாக அறிவிக்கிறார். என்னடா ஒரே குழப்பமாக இருக்கிறதா? இல்லை, இந்திய அரசு தெளிவாக இருக்கிறது. தமிழீழ போராட்டமும், புலிகளும் சந்தித்துள்ள இன்றைய நெருக்கடி நிலையை பயன்படுத்தி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் செய்ய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன் மூலம் தமிழீழ மக்களின் போராட்டத்தையும், புலிகளையும் நசுக்கிவிட விரும்புகிறது. இந்திய தலையீட்டை அங்கீகரிக்கும் EPDP போன்ற தமிழ்ப் பாராளுமன்ற தலைமைகளைக் கொண்டு சிறீலங்கா அரசை அரசியல் ரீதியாக சட்டமூலம் நிர்ப்பந்தித்தும், இந்திய தலையீட்டை ஏற்கும் ENDLF போன்ற ஆயுத போராட்ட இயக்கங்கள்மூலம் அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பதுமான இரட்டைக் கொள்கையை இந்திய அரசு மீண்டும் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்க்கும், திம்புக் கோரிக்கையை முன்னிறுத்தும் இயக்கங்களை அழிப்பதும் 87 ஒப்பந்தத்தை தமிழ் மக்கள் மீது திணிக்கும் தயாரிப்புகள் நடக்கின்றன.

ENDLF உட்பட கொழும்பு பாராளுமன்ற 'முன்னாள் ஆயுதப் போராட்டத்' தலைமைகள் சில, சந்திரிகா அரசுக்கு எதிராக மீண்டும் போராடுவது பற்றி காதோடு காதாக பேசுகின்றனர். கடந்த காலங்களில் இவ் இயக்கங்கள் ஆயுதப் போராட்டம் நடத்தவில்லை, யுத்த முனைக்கு அனுப்பவில்லை என்ற காரணங்களுக்காக மட்டும் இயக்கங்களைவிட்டு வெளியேறிய போராளிச் சகோதரர்கள் சிலர் இந்தியாவில், அய்ரோப்பிய நாடுகளில் இருந்து போர்க்களம் புக வந்துகொண்டிருக்கிறார்கள்.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக போராடப் புறப்பட்டு 87 ஒப்பந்தத்தின் மூலம் பாராளுமன்றத்தில் சரணாகதி அடைந்தவர்களையும் கூட சந்திரிகா அரசின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறையும், இவர்கள் மேலான பாராமுகமும் மீண்டும் இத் தலைமைகளை போராடத் தூண்டியுள்ளது. மீண்டும் போராட வருவதை வரவேற்போம். அதேபோல் புலிகள் இயக்கம் கடந்த காலத்தில் தனி இயக்க சர்வாதிகாரத்தில் இருந்து செய்த தடைவிதிப்பை - அழிப்பை கைவிட்டு அவ் இயக்கங்களை செயல்பட அனுமதிப்பதையும் வரவேற்போம். தமிழீழ தேசத்தின் நலனுக்காக மக்களின் விடுதலைக்காக உயிர் நீத்த போராளிகளின் கனவை நனவாக்க இத் தலைமைகள் எல்லாம் உணர்வுபூர்வமாக விரும்பி இதைச் செய்ய வேண்டும். தமது கடந்த காலத் தவறுகளை வெளிப்படையாக மக்களிடம், தங்கள் இயக்கப் போராளிகளிடம் முன்வைக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் தேசத்தின் பிரதான எதிரிகள் உள்நாட்டில் யார்? உலக அளவில் யார்? உள்நாட்டில் - உலகளவில் நண்பர்கள் யார்? உள் இயக்கப் படுகொலைகளை, சக இயக்க அழிப்புக்களை - தடைகளை - சகோதர யுத்தங்களை ஏன் செய்தார்கள்? ஆயிரக்கணக்கான போராளிகள் காயடிக்கப்பட என்ன காரணம்? வெளிநாடுகளில் உள் இயக்க - சக இயக்க மோதல்களை நடத்தியதன், 'ஆயுதக் கலாச்சாரக்காரர்களாக' மாறியதன் காரணம் என்ன? 85 கூட்டாக முன்வைத்த திம்புக் கோரிக்கைகளை கைவிட்டு 87 இல் ஏன் சமரசம் அடைந்தார்கள்? சொந்த மக்களை சார்ந்திருப்பதற்கு, மக்களை அமைப்பாக்குவதற்கு, மக்களை ஆயுதபாணியாக்குவதற்கு ஏன் தவறினார்கள்? இலங்கையில் தலையிட நினைக்கும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் அன்னிய நாடுகளின் போட்டாபோட்டியை, முரண்பாட்டை பயன்படுத்தி தமிழீழ தேசத்தின் சுதந்திரத்தை, மக்கள் விடுதலையை வெல்ல முடியும் என எந்த அரசியலில் இராணுவ தந்திரத்தில் இருந்து நடந்து கொண்டார்கள் - கொள்கிறார்கள்? இவை அனைத்திலும் என்ன தவறு இழைத்தார்கள். அத்தவறுகளை திருத்துவதற்கான வழிகள் என்ன? மொட்டையாக 'சனநாயக முறையில்' என்ற பதில் வேண்டாம். குறிப்பான சனநாயக வழிமுறைகளை சொல்லட்டும்.

இவற்றைப் பற்றி சிந்திக்காமல், தவறுகளை களையாமல் மாற்று வழிமுறையை முன் வைக்காது, எந்த இயக்க தலைமைகள் நடந்து கொண்டாலும், அது தங்கள் தலைமை நலன், குட்டி முதலாளிய அராஜக இயக்க நலன், அன்னிய நாடுகளின் ஆதிக்க நலனுக்காக மீண்டும் போர்க்களம் அழைப்பதாக, புகுவதாகவே இருக்கும். ஆயுதம் ஏந்துவார்கள், கூட்டணிகூட கட்டுவார்கள். அது '1985 இல் நான்கு போராளி இயக்கத் தலைவர்கள் கைகளை மட்டும் கூட்டாகப் பிடித்துக்கொண்ட 'கூட்டமைப்பாகவும்,' 'எதார்த்தத்தில் சகோதர யுத்தம்' நடத்தியது' போன்ற நிலைமை மீண்டும் வரலாம்.

தமிழீழப் போராட்ட வரலாற்றில் மீண்டும் ஆயுத பயிற்சிக்கு, போர்முனைக்கு வரத் தயாராகும் சகோதரர்களே, நீங்கள் மேற்கண்ட கேள்விகளைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்கள் தலைமைகளிடம் இருந்து தெளிவான பதிலைக் கேளுங்கள். "முதலில் யுத்தம் புரியுங்கள், பின்னால் அரசியல் பேசுவோம்", "அரசியல் வேறு - இராணுவம் வேறு, யுத்தம் நடப்பதால் அரசியல் பேசாதீர்கள்", "மீண்டும் ஆயுதப் போராட்டத்தை, இயக்கத்தை குழப்பாதீர்கள்" என்ற பதிலை மட்டும் உங்கள் தலைமைகள் தந்தால், நீங்களும் அதனை நம்பினால், சிறீலங்கா அரசுக்கு எதிராக செய்யும் எத்தனை, எந்தப் பெரிய தாக்குதல்களாலும் (புலிகள் செய்ததைவிட கூடவா செய்ய முடியும்) வெற்றிகளாலும், சிந்தும் இரத்தத்தாலும் - செய்யும் தியாகத்தாலும் மட்டும் தமிழீழ போராட்டம் கண்டுள்ள அரசியல் - இராணுவ தேக்கத்தை உடைக்க முடியாது என்பதை மீண்டும் அனுபவத்தால் உணர்வீர்கள். அயர்லாந்தில் ஜெரி அடம்ஸ் கைது செய்யப்பட்டதை கவனியுங்கள். "ஒஸ்லோ ஒப்பந்தத்தின்" பின்னும் பாலஸ்தீனத்தின் இழுபறி நிலைமையைப் படியுங்கள். ஆப்கானிஸ்தானுள் நடக்கும் சகோதர யுத்தத்தின் கொடூரத்தைப் பாருங்கள்.

திலீபன்

www.tamilarangam.net



# அனைத்து எதிரிகளிடமிருந்து

என்
பாசமுள்ள ஈழதேச மக்களே
உங்களோடு ஒரு கணம்
நான் பேசி முடிக்கு முன்
எனது உயிரும் பறிக்கப்படலாம்,

ஆயினும்

நாளையும் இதே போல்
ஆயிரம் தோழர்கள்
எனது குரலுடன் பேசவருவர்
எமது வீதிகளில் ராணுவ ட்ரக்குகளும்
கவச வண்டிகளும் செல்லாதிருக்கலாம்
கறுப்பு உடைகளும்
காக்கி உடைகளும்
சப்பாத்து தடங்களும் பதியாதிருக்கலாம்,

ஆனலும்

இன்றும் எமது வீதிகளெங்கும்
ஒன்றாக
பத்தாக
நூறாக
மக்களை நேசித்த போராளிகளும்
என் மக்களும் கூட
ஈழத்து வீதிகள் எங்கும்
பிணமாய் சரிவர்,
இரத்தம் சொட்ட அரைகுறை உயிருடன்
ரயர்களின் தீயில் எறியப்படுவர்
எரிக்கப்படுவர்
சாம்பராய் அல்ல
பூசா முகாமின் சித்ரவதைகளும்
வெலிக்கடைச் சிறையின்
கொடிய கொலைகளும்
புதிதாய் இங்கும்
தினமும் தொடரும்

இது ஏன்?

AK.47க்கும் M.16க்கும்
வேறுபாட்டை
அது வெடிக்கும் ஓசையைக் கொண்டே
தரம் பிரிக்க
எமது சிறார்கள்
கற்றுக் கொண்ட பின்னரும்

நீங்களோ இன்னமும்
எதிரிகளையும் நண்பர்களையும்
இனம் காண தவறுவதால்,

இவர்களின் துவக்குகள் குறிபார்ப்பது
இனவெறி அரசின்
இராணுவ
இலக்குகளை மட்டும் என்றிருந்தீர்
ஆனால்
அவைகள் எமது
முதுகுகளையும் குறிபார்க்கின்றது.

என் நேசமுள்ள மக்களே!

தினமும்
தெரிந்தும் தெரியாமலும்
இயக்க வெறிக்கும்
எதிர்ப் புரட்சியாளர்க்கும்
பலியாகி
புதையுண்டு போகும் எம்
செந் தோழர்களின்
இரத்தம் தோய்ந்த உடல்களை
தழுவித் தழுவி
சிவந்து போன என் கரங்களை உயர்த்தி,

நான் சொல்வது
ஒன்றே ஒன்றுதான்
நமது மொழியைப் பேசுவதால் மட்டும்
நமக்கு யாரும் நண்பர்களாக முடியாது

நம்மை நாமே
காத்துக் கொள்வோம்
ஆயுதங்கள் கைமாற வேண்டியதெல்லாம்
அனைத்து எதிரிகளிடமிருந்துதான்.

—28.9.1986.
- கௌரி.

www.tamilarangam.net



# ஜே.ஆர். இன் மரணம் இனவாதத்தின் மரணமல்ல... ஜே.ஆர். இன் மரணம் இனவெறித் தலைவனின் மரணம்!

பாசிஸ்ட்டுகள், சர்வாதிகாரிகள், இனவெறியர்கள் வளர்த்துவிட்ட பயங்கரவாத வன்முறையே இறுதியில் அவர்களையும் அழித்து விடுகிறது. பாசிச ஹிட்லரில் இருந்து சர்வாதிகார ராஜீவ் மற்றும் யூத இனவெறியன் சிமன் பெரோஸ் வரை எண்ணற்ற உதாரணங்களை உலக வரலாற்றில் காண முடியும். இலங்கையிலும்கூட பெருந் தேசிய வெறியை கட்டவிழ்த்து விட்ட பல இனவெறியர்கள் மனித வெடி குண்டிற்கு பலியாகிப் போவது சமகால நிகழ்வுகளாக இருந்து வருகிறது.

ஆனால் இதிலும் விதிவிலக்குகள் இருக்கத்தான் செய்கிறது. இத்தகைய மனித குல விரோதிகளில் சிலர் தமது மரணத்தை இயற்கை வழியிலும் அடைந்து விடுகின்றனர். இனவெறியனும் சர்வாதிகாரியுமான ஜே.ஆர். 90வது வயதில் இவ் வழியிலேயே தனது மரணத்தை அடைந்துள்ளார். ஒரு கொடுங்கோன்மைக்காரனின் மரணம் இவ் வழியில் நிகழக்கூடாது. மாறாக இவர்கள் மக்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டு அம் மக்களின் தீர்ப்பின் மூலமே அழிவைச் சந்திக்க வேண்டும்.

தமிழீழ, சிறீலங்கா மக்கள் ஜே.ஆரின் மரணத்திற்காக வருத்தப்பட்டிருப்பார்கள். ஏனெனில் ஓர் இனவெறியன், சர்வாதிகாரி தமது கரங்களால் தண்டிக்கப்படாமலேயே மரணம் அடைந்துள்ளான் என்பதற்காக.

இனவாதிகளும், அன்னிய ஆதிக்க சக்திகளும் தமது நம்பகமான விசுவாசியை இழந்ததற்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். அதே வேளை தெற்காசியாவின் சிறந்த ராஜதந்திரி என்றும் இலங்கையின் இன பிரச்சனையை தீர்க்க பாடுபட்டவர் எனவும் உண்மைக்கு மாறாக பத்திரிகைகள் ஓலமிடுகின்றன.

இவ்வாறு இனவாத சர்வாதிகாரியின் கழுகு முகத்தை அவரின் துதிபாடிகளும், வல்லரசிய எசமானர்களும் வெற்றுவேட்டு வார்த்தை அலங்காரங்களால் மறைக்க முயன்றாலும் அதையும் மீறி வரலாற்றுப் பதிவுகள் அவரின் உண்மை முகத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டிக் கொண்டிருக்கிறது.

அழகும் அமைதியும் கொண்டிருந்த தீவை இன வன்முறைக் களமாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஜே.ஆரும் ஒருவர். பௌத்த இனவெறி அரசியலையே தனது தாரக மந்திரமாக கொண்ட இவர் 1957 - ல் கையெழுத்தான பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் மை உலரும் முன்பே கிழித்தெறிய வைத்தவர். 50:50 உரிமை கோரும் தமிழ் மக்களுக்கான இவ் ஒப்பந்தம் இவர் மேற்கொண்ட "கண்டி பாத யாத்திரை" என்ற இனவெறிப் போராட்டத்தின் மூலம் செல்லாக் காசானது.

தமிழ் மக்களை சொந்த மண்ணில் நாடோடிகளாக்கும் பௌத்த இனவெறியர்களின் கனவை 1977 - ல் ஆட்சிக்கு வந்ததும் ஜே.ஆர். நனவாக்கத் தொடங்கினார். தமிழர்கள்



மேலான இன - மத - மொழி துவேசத்தையே வாய்ப்பாடாகக் கொண்ட சிறீலங்கா பௌத்த சங்கத்திற்கு, சாமரம் வீசுகின்ற இனக்கலவரத்தை 1977 - ல் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் சிங்கள இன வெறியர்க்கும் கூட தனது விசுவாசத்தை காட்டிக் கொள்ள முடிந்தது.

பொருளாதார அரங்கில் தமிழ் சிங்கள முதலாளிகளுக்கு இடையில் இருந்து வந்த போட்டியும் முரண்பாடும் படிப்படியாக பண்பாட்டு அரங்கிற்கும் சிங்கள இனவாத அரசியல்வாதிகளாலும் அதிகார வர்க்கத்தாலும் மாற்றப்பட்டு வந்தது. அதன் அப்பட்டமான வெளிப்பாடுதான் 1977 இனப்படுகொலை. இதில் பல நூறு தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டது. இவ்வாறு இரு சமூகத்தின் முதலாளிகளுக்கு இடையில் இருந்த முரண்பாடு தமிழ் இனத்தின் மேலான இன அடக்குமுறையாக தீவிரமடைந்தது.

1977க்கு முந்தைய ஆண்டுகளில் இருந்தே தமிழ் மக்களின் உரிமைப் பறிப்பும், இனவாதமும் ஒன்றுடன் ஒன்று சார்ந்து வளர்க்கப்பட்டது. இதில் உடனடி பாதிப்பை அடைந்தவர்கள் தமிழ் மாணவர்களே. இனவாதத்தின் தீவிர வளர்ச்சியும் அதன் ஒரு வடிவமான இன ஒடுக்கு முறையும் தமிழ் இளைஞர்கள் மத்தியில், குறிப்பாக மாணவர்கள் மத்தியில் தனி நாட்டுக்கான விதையை ஊன்றியிருந்தது. இன ஒடுக்கு முறையின் உக்கிரத் தன்மையின் விளைவால் சேர்ந்துவாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்ட தமிழ் மக்களின் மூச்சோடும் தமிழீழக் கோரிக்கை கலந்து கொண்டது.

ஆட்சிக்கு வந்த யூ.என்.பி. கட்சியும், ஜே.ஆரும் பாரா

www.tamilarangam.net



ளுமன்ற அதிகாரத்தை பறிக்கும் அதிபர் ஆட்சி முறையை கொண்டு வந்ததுடன் செல்லரித்துப் போன பாராளுமன்ற சனநாயகத்தை கேலிக் கூத்தாக்கினார். பாராளுமன்றம் இனவெறியர்களின் அரட்டை மடமானது; இன ஒடுக்கு முறைக்கு துணை போனது. தமிழ் மக்களின் தமிழீழக் கோரிக்கை அங்கு இனத்துவேஷ கொக்கரிப்புகள் மூலம் பேரினவாத அடிவருடிகளால் நிராகரிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து ஜே.ஆர் அரசு வடக்கு - கிழக்கிலும் வன்முறைப் புயலை பரவவிட்டது. இக் காலப் பகுதியில் தனி நாட்டுக்கான போராட்டம் திட்டவட்டமான ஆயுத போராட்ட வடிவத்தை எடுத்தது.

அதுவரையில் தமிழ் மக்களின் உரிமைப் பறிப்புகளை செய்து வந்த இனவாத ஜே.ஆரும் அரசும் தமிழ் மக்களின் எதிர்ப்பைக் கண்டு மிரண்டனர். தமிழ் மக்களையும் போராளிகளையும் ஒடுக்க ஒன்றன் பின் ஒன்றாக கறுப்பு சட்டங்களை கொண்டு வந்தனர். தமிழ்த் தாயக மண் போராளிகளின், மக்களின் இரத்தத்தால் சிவக்கத் தொடங்கியது. கொட்டடி சித்திரவதைகள் நாளாந்த நிகழ்வுகளாயின. பேரினவாத ராணுவத்தின், பொலீசின் வன்முறைகளால், இதற்கு பதிலடியான பல்கலைக் கழக மாணவர்களின், போராளிகளின் போராட்டங்களால் அரசியல் அரங்கம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

முதலாளித்துவ சனநாயகத்தைக்கூட குழி தோண்டிப் புதைக்கும் காட்டுமிராண்டித் தனமான கறுப்புச் சட்டங்கள் எதிர்ப்பையும் கண்டனங்களையும் எதிர் கொண்ட போதிலும் அவை தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டன. 1978 - ல் தமிழ் போராளிகளை சட்டத்திற்கு எதிரானவர்கள் என்று அறிவிக்கும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதே போன்று 1979ல் கொண்டுவரப்பட்ட "பயங்கரவாத தடைச் சட்டம்" அரச படைகள் சந்தேகிக்கும் எந்தவொரு நபரையும் கைது செய்து தடுத்து வைக்கவோ அல்லது கொன்று தடயத்தை மறைக்கவோ வகை செய்கிறது. இக் கசாப்பு சட்டத்திற்கு எதிராக தமிழீழ பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களை ஜே.ஆர். அரசு கண்மூடித்தனமாக ஒடுக்கியது. 1967 - ல் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசின் மற்றும் 1978 - ல் அயர்லாந்து போராளிகளுக்கு எதிரான பிரிட்டிஷ் காலனிய வாதிகளின் பயங்கரவாத தடுப்பு சட்டங்களையும் விஞ்சி மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்ற அளவிற்கு இனவாத ஜே.ஆர் அரசின் 'ப.த.ச.' இருந்தது. மற்றும் 1983 - ன் அவசரகாலச் சட்டம், 1978 இன் 6வது அரசியல் சாசன திருத்தச் சட்டமும் இதற்கு உதாரணமாகும்.

தமிழ்த் தேசிய இனத்தை அடக்கி அழிப்பதும், சிறுமைப் படுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவர்களின் பொருளாதார நிலைகளை குறிவைத்து தகர்ப்பதும், வளங்களைச் சூறையாடுவதும் கூட இன முரண்பாடு உச்ச நிலைக்கு வளர்க்கப்பட்டதன் நோக்கமாக இருந்தது. இதன் விளைவாக, எல்லைப் புறங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் அவர்களது வாழ்விடங்களில் இருந்து பெயர்த்தெறியப்பட்டு அந்தப் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது. ஜே.ஆர். அமைச்சரவையில் இருந்த சிறில் மத்யூ, காமினி திசநாயக்கா போன்ற பக்கா இனவெறியர்கள் இத் திட்டங்கள் நிறைவேறுவதில் பிரதான கருவியாக இருந்தனர். உலக வங்கி உதவியுடன் செய்யப்படுகின்ற இச் சிங்கள குடியேற்றத் திட்டங்களின் மூலம் தமிழ் மக்கள் பிரதேச தொடர்ச்சியையும், புவியியல் பரப்பையும் பறிகொடுத்து நின்றனர்.

1981ல் அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட யாழ் நூலகம், ஈழ நாடு காரியாலய எரிப்பு தமிழ் மக்கள் மீதான ஜே.ஆர் அரசின் பண்பாட்டு படுகொலையே தவிர வேறல்ல. 1983 - இல் 53 தமிழீழ போராளிகள், ஆதரவாளர்கள் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டனர். இனவாதம் எந்தளவிற்கு அரசுத் துறைகளிலும், பிற கட்டுமானத்திலும் வேரூன்றி இருந்தது என்பதற்கு இவ் அரசியல் படுகொலை எடுத்துக்காட்டாக இருந்தது. தமிழ் இனத்தின் இதயத்தில் குறிவைத்து பாய்ச்சிய ஈட்டியாக 1983 யூலை 23 படுகொலை அமைந்தது. ஜே.ஆரும் இனவெறியர்களும் திட்டமிட்டே இவ் அரச பயங்கரவாதத்தை தமிழர்மேல் கட்டவிழ்த்து விட்டனர். இந்த தேசிய அவமானத்திற்கான விலையை இனவாதிகள் இன்றும் கொடுத்து வருகின்றனர்.

1983 யூலை 18ல் வெளியான "டெய்லி டெலிகிராப்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஜே.ஆரின் பேட்டியில் : "நான் யாழ்ப்பாண மக்களின். அபிப்பிராயத்தை பற்றி கவலைப்படவில்லை...அவர்ளைப் பற்றியோ, அவர்களின் உயிரைப் பற்றியோ அல்லது அவர்களின் அபிப்பிராயத்தைப் பற்றியோ இப்பொழுது நாங்கள் சிந்திக்க முடியாது..." என இனவாத விஷத்தை அப்பட்டமாக்கியுள்ளார். ஜே.ஆரின் பேட்டி வெளியான ஒரு வாரத்திற்குள் 1983 யூலை கலவரம் அரச படைகளின் துணையுடன் சிங்கள காடையர்களை கொண்டு கட்டவிழ்த்து விடப்பட்டது. எரிந்த சடலங்களின் வாடை கொழும்பில் இருந்து தமிழர்கள் வாழ்ந்த பிற சிங்கள பகுதிகளையும் சூழ்ந்து கொண்டது. முன்னர் வீதிகளில் மயிலிறகுடன் வலம் வந்திருந்த புத்த பிக்குகள் அரிவாளுடன் அலைந்தனர். "யுத்தம் என்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம்" என தமிழர்களின் பிணக் குவியல் மேல் நின்று ஜே.ஆர் ஊளையிட்டார். தமிழீழ பகுதிகள் புயலுக்கு முந்தைய அமைதி போல் காட்சியளித்தது. தமிழர்கள் மேலான இனக் கலவரம் தமிழ் நாட்டிலும் கோபத்தை தூண்டியது.

தமிழ்த்தேசம் தன்னை ஒரு முழுமையான பௌதிக சக்தியாக மீளுருவாக்கம் செய்வதை சிங்கள - பௌத்த இன வெறியர்களாலும் அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி நின்ற ஜே.ஆராலும் சகிக்க முடியாததன் விளைவே தமிழ் தேசிய இனத்தின் மீதான இன - பண்பாட்டு - அரசியல் படுகொலைகளுக்கான காரணமாக அமைந்தது. இன அடக்குமுறையையும், அழித்தொழிப்பையும் மேலும் அதிகரிக்கவும், பரவலாக்கவும் தமிழீழ பகுதிக்கான அவசரகாலச் சட்டம் 1983ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ராணுவத்தின் தேடுதல் வேட்டை, ஊரடங்கு உத்தரவு, இளைஞர்களை யுவதிகளை கைது செய்தல், மக்கள் திரள் படுகொலைகள் என சகிக்க முடியாத அடக்குமுறை வடிவங்கள் தமிழீழத்தின் நாளாந்த நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றது.

தமிழ் தேசிய இனத்தின் வரலாற்றையும், தனித்துவத்தையும் பாதுகாக்கும் திம்பு கோரிக்கையை ஏற்க மறுத்த ஜே.ஆர்

www.tamilarangam.net



இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வையே முன் நிறுத்தினார். இனப் பிரச்சனையை தீவிரமாக்கி சிக்கலடையச் செய்தது ஜே.ஆரும் அவரது யூ.என்.பி. கட்சியும்தான் என்று வாய்கிழிய கூப்பாடு போட்ட சந்திரிகா அம்மையாரும் அமைதி நாடகமாடிக் கொண்ட ஜே.ஆரின் யுத்தக் கொள்கையையே தொடர்கிறார்.

போராளிகளுக்கு உதவுவதாக குற்றப்படுத்தி இந்திய அரசை தொடக்கத்தில் எதிர்த்த அமெரிக்க சகபாடியான ஜே.ஆர், இந்திய அரசு போராளிகளை ஒடுக்கத் தொடங்கியதும் ஓடிப்போய் அதனுடன் நயவஞ்சகமாக நட்பு பாராட்டினார். வரலாற்று மோசடியும், துரோகத்தனமும் கொண்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையில் கையெழுத்திட்டு, இந்திய விரிவாதிக்க நலன்களுக்கு குடைபிடித்ததுடன் இந்திய ராணுவத்தை தமிழ் மக்களுடன், போராளிகளுடன் மிகத் தந்திரமாக மோத வைப்பதற்கும் இந்த இனவாத சூத்திரதாரியால் முடிந்தது. இந்திய அரசை இத்தகையதொரு சதிக்குள் மாட்டவைத்த ஜே.ஆரின் அரசியல் சாணக்கியத்தை தெற்காசிய நாடுகள் பாராட்டவே செய்தன.

இவரின் பத்தாண்டு கால காட்டுத் தர்பார் இலங்கை வரலாற்றின் கறைபடிந்த பக்கங்களாக பதிவாகிப் போயுள்ளது. ஆட்சிக்கு வந்ததும் தீவிரமாக அமுல்படுத்திய ஏகாதிபத்திய சார்பு மற்றும் யுத்த கொள்கையின் விளைவால் இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்பு மேலும் ஏகாதிபத்திய சார்புத் தன்மை கொண்டதாகவும், அழிவை நோக்கியும் வேகமாக சென்றது. மீளமுடியாத கடன் சுமை நாட்டு மக்களின் தலையில் சுமத்தப்பட்டது. நாட்டை பன்னாட்டு கம்பனிகளுக்கு அடைமானம் வைத்ததுடன், சிங்கள விவசாயிகளின் நிலங்களை பறித்து அக் கம்பனிகளுக்கு வழங்கி நாட்டை சூறையாட அனுமதித்தார். சுதந்திர வர்த்தக வலயம், தாராள இறக்குமதி, அமெரிக்க வானொலி நிலையத்திற்கான அனுமதி என்று பன்னாட்டுக் கொள்ளைக்கு இலங்கையின் வாசலை அகலத் திறந்துவிட்ட இந்த அமெரிக்க எடுபிடியால்தான் பாராளுமன்றத்தின், பிரதமரின் அதிகாரங்களை 'ரப்பர் ஸ்டாம்ப்' ஆக்கும், ஒருவரின் கையில் அதிகாரத்தைக் குவிக்கும் அதிபர் ஆட்சி முறை புகுத்தப்பட்டது. அதிபர் ஆட்சியை ஒழித்து பாராளுமன்ற ஆட்சி முறையை மறுபடியும் கொண்டு வருவதாக அறிவித்த சந்திரிகாவின் தேர்தல் வாக்குறுதியும் அதிகார சுகத்தைக் கண்டதும் வெற்று வேட்டாகிப் போனது.

1980களில் தமது நியாயமான கோரிக்கைகளுக்காக போராடிய 7000 அரசு ஊழியர்களை வேலையில் இருந்து விரட்டிய சர்வாதிகாரிதான் ஜே.ஆர். ஆளும் வர்க்க அடிவருடி தொண்டமான் மற்றும் அரசியல் பிழைப்பு நடத்தும் TULF தலைவர்களின் உடந்தையுடன் சர்ச்சைக்குரிய கருத்துக் கணிப்பு தேர்தலை நடத்துவதில் வெற்றி கண்டார். இதன்மூலம் பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடத்தாமலேயே அடுத்த ஐந்தாண்டுகளுக்கும் அதே பிரதிநிதிகள் தொடர்ந்து இருப்பதற்கு வகை செய்யப்பட்டது. தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் மக்களின் உரிமையும், பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் கேள்விக்குள்ளானது. TULF இன் இந்த உதவிக்காக ஜே.ஆர். செய்த கைமாறுதான் 1978இன் 6வது அரசியல் சாசன திருத்த சட்டத்தைக் கொண்டு TULF இன் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை 1983 நடுப்பகுதியில் பறித்துக் கொண்டது.

ஜே.ஆரின் சர்வாதிகாரத்திற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியிலும் போராட்டங்கள் வெடித்தன. JVP போன்ற ஆயுதக் குழுக்கள் அரசை எதிர்த்து போராடின. தனக்கும் தனது அரசிற்கும் எதிரான சிங்கள மக்களின், இயக்கங்களின் போராட்டங்களை ஈவிரக்கமின்றி நசுக்கினார். தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்திய கறுப்புச் சட்டங்களையே சிங்கள மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கும் பயன்படுத்தினார். எதிர்க் கட்சிகளுடனான அரசியல் பூசல்களையும் கூட வன்முறை வழியிலும், அரசியல் காழ்ப்புணர்விலும் இருந்து கொண்டே கணக்குத் தீர்த்தார். ஜே.ஆரின் இந்த அரசியல் அடாவடித்தனத்தால் எதிர்க்கட்சியாக இருந்த SLFP ஆட்டம் கண்டது. 1972 - இல் இந்திய இராணுவத்தின் துணையுடன் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள், யுவதிகளை அழித்தொழித்த முன்னாள் பெண் சர்வாதிகாரியும் தற்போதைய பிரதமருமான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை ஆறாண்டுகளுக்கு பறித்தது ஜே.ஆரின் எதிர்க்கட்சிகள் மேலான அரசியல் பழிவாங்கலின் உச்சக்கட்டமாக இது இருந்தது. இதன் காரணமாகவே சந்திரிகா அரசும் ஜே.ஆரின் இறுதிச் சடங்குகளை அரசு மரியாதைகளுடன் செய்வதா இல்லையா என்று நான்கு நாட்களாய் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தது.

நாட்டை மீளா இருளில் மூழ்கடித்துவிட்டு அரசியல் துறவறம் பூண்ட இந்த பௌத்த சந்நியாசியின் பத்தாண்டு கால ஆட்சி இனத்துவேசத்தையும், சர்வாதிகாரத்தையும், ஏகாதிபத்திய வால்பிடி போக்கையும் உள்ளடக்கமாகக் கொண்டது. ஜே.ஆர் இன்று இறந்துபோனாலும் அவர் சுவீகரித்த இந்த மூன்று உள்ளடக்கங்களும் அவருடன் அழிந்து போகவில்லை. மாறாக இந்த பிற்போக்கு கூறுகள் பிரேமதாசா, சந்திரிகா போன்ற இனவாத தலைவர்கள் மூலம் அனைத்து துறைகளிலும் திடப்பட்டும், வளர்ந்தும் வந்திருக்கிறது.

சிறீலங்காவின் முக்கிய இனவாத தலைவர்களான ரஞ்சன் விஜயரட்ணே, அத்துலத் முதலி, பிரேமதாசா, காமினி திசநாயக்கா போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்ட போதிலும் இவர்களின் இழப்பின் மூலம் இனவாதிகளும், ஆளும் வர்க்கமும் பலவீனப்பட்டனரே தவிர அழிந்து போகவில்லை. இந்த வழியில் அது சாத்தியமும் அல்ல. மேற்சொன்ன பிற்போக்கு உள்ளடக்கங்களுக்கு எதிரான போராட்டமே இனவாதிகளையும் ஆளும் வர்க்கத்தையும் அழிக்கக் கூடியது. வலுவான இனவாத தலைவர்களை இழந்தால்கூட தம்மை மீளுருவாக்கம் செய்யும் பலத்தை சிங்கள - பௌத்த இனவாதிகளும், ஆளும் வர்க்கமும் கொண்டுள்ளது.

இத்தகைய இனவாத, சர்வாதிகாரத்தையும் அதை பிரதிநிதித்துவம் செய்யும் பிற்போக்காளர்களையும் அம்பலப்படுத்தி பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்துவதன் மூலமே தமிழீழ போராட்டத்தை அதன் திசைவழியை நோக்கி வளர்த்தெடுக்க முடியும்.

செழியன்

www.tamilarangam.net

# தேசபக்தன்

☆ சிறீலங்கா அரசே!

— தமிழீழத்தில் யுத்தத்தை, மனித உரிமை மீறலை நிறுத்து.

— அமைதிக்கான யுத்தத்தை - அதிகார பரவல் திட்டத்தை கைவிடு. இன அமைதி காண "திம்புக் கோரிக்கை திட்டத்தை" முன்வை.

☆ இந்தியரசே! வல்லரசுகளே!

— தமிழீழப் போராட்டத்தில் தலையீடாதீர்கள்; சிறிலங்கா அரசுக்கு பொருளாதார இராணுவ உதவிகளை நிறுத்துங்கள்.

— தஞ்சம் புகும் தமிழீழ அகதிகளுக்கு "அகதி அந்தஸ்து" கொடுங்கள்.

— அரசியல் தீர்வுக்கு திம்புக் கோரிக்கையை அங்கீகரியுங்கள்.

☆ ஐ.நா சபையே! உலக நாடுகளே!

— உங்கள் அமைதிப்படைகள் நமக்கு வேண்டாம். அரசியல் தீர்வுக்கு சந்திரிகாவை நிர்ப்பந்தியுங்கள்.

☆ உலக மக்களே!

— உங்கள் அரசுகளை நிர்ப்பந்தியுங்கள், தமிழீழ மக்களுக்கு விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள்.

Book-post

Printed Matter

From Address

To

***A. Shoba Doss***
***67 Parkwood Villege dr***
***# 308 Donmills***
***Ontario***
***M3A 2X4***
***CANADA***

**PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMIL EELAM**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்